# சீஷத்துவத்தின் தரிசனம்
# மற்றும் உத்திகள்

குடும்ப சீஷத்துவ ஊழியங்கள்

கிரேக் காஸ்டர்

Discipleship Takes Vision and Strategy in Tamil -

# சீஷத்துவத்தின் தரிசனம் மற்றும் வியூகம்

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19–20)

தேவனுடைய பிள்ளைகளுக்கு சீஷத்துவம் அவருடைய இருதயத்தின் வாஞ்சையாக இருந்தது என்பது நமக்கு எப்படி தெரியும்? மத்தேயு 28:19-20 இன் படி இயேசு, பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன்பாக அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த கடைசி கட்டளை சீஷர்களை உருவாக்குவதே. குடும்ப சீஷத்துவ ஊழியங்கள் (FDM) இந்த கட்டளையை தீவிரமாக எடுத்துக்கொண்டு, பல ஆண்டுகளாக போதகர்கள் மற்றும் சாதாரண மக்களை ஆயத்தப்படுத்துகிறது. இந்த சிறு புத்தகத்தில் உள்ள எங்கள் நோக்கம், போதகர்கள் சீஷத்துவத்திற்கான தரிசனத்தைப் பெற உதவுவதும், மற்றும் சரீரமாகிய விசுவாசிகளை கருத்தில் கொண்டு வழிமுறைகளை உருவாக்குவதுமாகும். கடைசியாக, கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் முதிர்ச்சியடையவும், மற்றவர்களை சீஷர்களாக மாறுவதற்கு கற்றுக்கொள்ளவும் உதவ விரும்புகிறோம், இதன் மூலம் பிரதான கட்டளையை நிறைவேற்றுகிறோம்.

இந்த புத்தகமானது, பயனுள்ள சீஷத்துவ வழிமுறைகளின் முக்கியம் மற்றும் அவசியம், ஆகியவற்றை வேதாகம கண்ணோட்டத்தோடு எடுத்துக் காட்டுகிறது. இன்றைய குளிரும், அனலுமற்ற கிறிஸ்தவ கலாச்சாரத்தில் சபைத் தலைவர்கள் சபைகளில் எந்த எந்த சீஷத்துவ வழிமுறைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்துவது என்பதை தீர்மானிப்பது கடினம் என்பதை நாங்கள் அறிவோம். பல சமயங்களில், சபைத் தலைவர்கள் பிரசங்க பீடத்தில் இருந்து போதிக்கப்படும் போதனைகளை விசுவாசிப்பது மட்டும் போதுமானது என்று தவறாக நினைக்கிறார்கள், அல்லது அதிக ஊழியங்கள் செய்வது அல்லது வீட்டுக் குழுக்களை நடத்துவதே இதற்கு பதில் என்று நினைக்கிறார்கள், இவற்றை பயிற்சி பெறாத சாதாரண தலைவர்களிடம் விட்டுவிடுகிறார்கள். சீஷத்துவம் உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்க, உங்கள் சபையில் உள்ள விசுவாசிகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், விசுவாசிகளின் எண்ணிக்கையையும் விரிவுபடுத்தும் ஒரு தெளிவான தரிசனம், வியூகம் அல்லது உத்தி மற்றும் திட்டம் இருக்க வேண்டும்ராஜ்ஜியத்தை மேம்படுத்துவதும் மற்றும் விரிவுபடுத்துவதும். இதுவே தேவனின் பிரதான கட்டளை -.

சீஷத்துவத்தின் இன்றியமையாத முக்கியத்துவம் மற்றும் உங்கள் சபைக்கான ஒரு தரிசனமும், தெளிவான உத்தியை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய தேவனின் கண்ணோட்டத்தை, முதலில் உங்கள் தலைவர்களுக்கும், பின்னர் உங்கள் மந்தைக்கும் இந்த சிறு புத்தகம் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபம் செய்கிறோம். உண்மையான சீஷத்துவத்திற்கான தேவனின் விருப்பம் உங்கள் சபையின் தரிசனமாகவும் முன்னேறுவதற்கான உத்வேகமாகவும் மாற நாங்கள் ஜெபம் செய்கிறோம். உங்கள் முயற்சிகளையும் திட்டங்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

## இன்றைய சீஷத்துவத்தின் பிரச்சனை

கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்குச் செல்வதற்கு முன், அவர் சீஷர்களை உருவாக்கவும், தேவனுடைய வார்த்தையில் உள்ள அனைத்தையும் கடைப்பிடிக்கும்படி பரிசுத்தவான்களுக்குக் கற்பிக்கவும் அப்போஸ்தலர்களை நியமித்தார். இந்த செயல்முறை முதலில் இயேசுவால் அவரது பொது ஊழியத்தின் போது செய்து காட்டப்பட்டது பின்னர் அவரது சீஷர்களால் ஆரம்பகால சபையை உருவாக்கியது.
கிறிஸ்தவர்களாகிய நமக்கு இப்போது இதே கடமை இருக்கிறது—சீஷர்களை உருவாக்கி, தேவன் யார் என்பதையும், அவருக்காக எப்படி வாழ வேண்டும் என்பதையும் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இந்த கட்டளையை யுகத்தின் இறுதி வரை அதாவது உலகத்தில் நாம் வாழும் வரை அனைத்து

விசுவாசிகளும் பின்பற்றுவதே நமது பணி என்று அவர் கூறுகிறார். ஆனால் தற்போது எத்தனை சபைகள் இயேசுவின் கட்டளையை முழுமையாக புரிந்து கொண்டு செயல்படுகின்றன? துரதிர்ஷ்டவசமாக, பல சபைகள் அப்படி செயல்படுவதில்லை. என்ன நடக்கிறது? யார் அல்லது எதை குற்றம் சொல்வது? சபை தலைமையானது இந்த நிலைக்கு காரணம் விசுவாசிகளின் சோம்பேறித்தனம் என்று குறைகூறுவார்கள் அல்லது நாம் வாழும் உலகின் சோதனைகள் மற்றும் கவனச்சிதறல்களை எதிர்கொள்ளும் போது தேவனுடைய விருப்பத்திற்கு கீழ்ப்படிய விரும்பாததை குற்றம் சாட்டலாம். ஆனால் உண்மையான பிரச்சனை என்னவென்றால் அதிகமான சோம்பேறித்தனமோ அல்லது நமது சபைகள் மற்றும் வீடுகளுக்கு வெளியே நடக்கிற காரியங்கள் அல்ல - இது நமது சபைகள் மற்றும் வீடுகளுக்குள் நடக்காத காரியங்களே பிரச்சனையாக இருக்கிறது.

இன்றைய சீஷத்துவத்தில் உள்ள பிரச்சனைகளை மூன்று முக்கிய பிரச்சனைகளாக சுருக்கி உள்ளோம்:

1. நமது உறவுகளுக்கான தேவனின் முன்னுரிமை ஒழுங்கைப் பற்றிய புரிதல் இல்லாமை;
2. பொதுவாக உண்மையான சீஷத்துவத்தைப் பற்றிய புரிதல் இல்லாமை;
3. நம் சொந்த சபைகள் மற்றும் வீடுகளுக்குள் உள்நோக்கம் இல்லாதது.

தற்போது இவைகளை பற்றி பார்போம்.

### தேவனின் உறவுகளுக்கான முன்னுரிமை ஒழுங்கைப் பற்றிய புரிதல் இல்லாமை

சுவிசேஷ சபைகள் ((Evangelical churches) மத்தேயு 28:19-20ஐ சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் மக்களைத் தேடிச் செல்வதற்கும் அவர்கள் இரட்சிக்கப் படுவதற்கும், இயேசுவின் பிரதான கட்டளையை ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள பல விசுவாசிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் ஆவிக்குரிய நிலை, ஒரு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே முறையாக சீஷராக்கப்பட்டுள்ளனர் என்ற சோகமான யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது. தேவன் தங்களுக்கு கொடுத்த விஷயங்களை சரியான முன்னுரிமை வரிசையில் கடைப்பிடிப்பது என்றால் என்ன என்று அவர்களுக்கு தெரியாது. , அதனால் அவர்கள் தேவனோடும், மனைவியோடும், பிள்ளைகளோடும் மற்றும் மற்ற மனிதரோடும் வெற்றிகரமாக வாழவும், அவரில் நிலைத்திருக்க நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்".

இன்று பல கிறிஸ்தவர்கள் தேவனுடைய வல்லமையில் நடக்கவில்லை, ஏனென்றால் தினமும் இயேசுவில் நிலைத்திருப்பதன் முக்கியத்துவத்தையோ, அவசியத்தையோ அவர்கள் அறியவில்லை (யோவான் 15:7). இதன் காரணமாக, கிறிஸ்தவ குடும்பங்கள் இந்த புறக்கணிப்பின் எதிர்மறையான பலனை அறுவடை செய்கின்றன. விவாகரத்து விகிதங்களில் நாம் அதைக் காணலாம், இது கிறிஸ்தவர் அல்லாதவர்களின் விவாகரத்து விகிதங்களை விரைவாகப் பிடித்துக்கொள்கிறது, மேலும் அதை நம் பிள்ளைகளிடமும் காணலாம். கிறிஸ்தவ வீடுகளில் இருந்து அதிகமான பிள்ளைகள் போதைப்பொருள், மதுவை துஷ்பிரயோகம் செய்தல், பாலியல் பாவம் மற்றும் ஆரோக்கியமற்ற உறவுகளில் ஈடுபடுகின்றனர். பெற்றோர்கள் மற்றும் அதிகாரத்திற்கு எதிரான கிளர்ச்சி மற்றும் அவமரியாதை ஆகியவையெல்லாம் இப்போது சபைகளில் கூட பொதுவான வாலிப பருவ நடத்தை என்று கருதப்படுகிறது. உண்மை என்னவெனில், அநேக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் பலவீனமாக உள்ளனர், மேலும் நம் குடும்பங்கள் கடுமையான பிரச்சனையில் உள்ளன.

ஆரம்பத்தில், தேவன் ஆதாம், ஏவாளை படைத்த பிறகு, அவர் குடும்பத்தை வடிவமைத்தார். குடும்பம் அவருக்கு முக்கியம் என்பதும், சபைகளுடைய சீஷத்துவத்தின் வழிமுறைகளுக்கு அது முதன்மையாக இருக்க வேண்டும் என்பதும் தெளிவாகிறது. இன்று சபையில் பல குடும்பங்கள் தோல்வியடைந்து வருகின்றன. ஆரோக்கியமான குடும்பத்தைக் கட்டி எழுப்பவும் பராமரிக்கவும் தேவன் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்த அறிவுரைகளை அறியாதவர்களாக இருக்கின்றனர். சபைகள் இந்த பிரச்சனைகளை வேண்டுமென்றே புறக்கணிக்கவில்லை என்றாலும், குடும்ப ஊழியத்திற்குரிய சீஷத்துவத்தின் மாதிரிக்கான தரிசனம் அவர்களுக்கு இல்லை மற்றும் விசுவாசிகளை வெற்றிக்கு ஆயத்தப்படுத்தும் வேதாகம உத்திகளை வரையறுக்கவில்லை. வேலை செய்வது, பொழுதுபோக்குவது அல்லது சபையில் சேவை செய்வதை விடவும் நம் குடும்பங்களை பராமரிப்பதை தேவன் மிக முக்கியமானதாக கருதுகிறார். இன்னும் பெரும்பாலான விசுவாசிகள் இந்த வழியில் வாழவில்லை மற்றும் குடும்ப வாழ்க்கைக்கு பொருந்தும் வேதாகம சத்தியங்களில் ஒருபோதும் வழிநடத்தப்படவில்லை. குடும்ப அமைப்பு என்பது கணவன் மற்றும் மனைவிகளுக்கான ஊழியத்தின் முன்வரிசையாகும், மேலும் இந்த முக்கியமான பொறுப்புகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது

குறித்து அவர் நமக்கு வழங்கிய வேத வழிமுறைகளை நாம் அறிந்து பின்பற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இது குடும்பத்துடன் தொடங்குகிறது. இங்குதான் தொடங்கப்பட வேண்டும்.

### பொதுவாக, உண்மையான சீஷத்துவத்தைப் பற்றிய புரிதல் இல்லாமை

சீஷத்துவத்தை வரையறுக்கும்படி நீங்கள் ஒரு கிறிஸ்தவரிடம் கேட்டால், அவர் புதிய விசுவாசிகளுக்கு வகுப்பு எடுத்து, அங்கு அவர்கள் விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைக் கற்றுக்கொள்வர் என்று கூறுவார். இது, நிச்சயமாக மிக முக்கியமானது, ஆனால் இது அதைவிட மிக முக்கியமானது. சீஷராவது என்பது இயேசுவைப் போல் இருப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வது-அவர் நமக்குக் கொடுத்த மற்றும் அவருடைய கிருபையால் செய்ய அறிவுறுத்திய அனைத்தையும் எவ்வாறு சரியாகச் செய்வது என்பதாகும். எதிர்பார்ப்பு என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட முதிர்ச்சியின் போது, மாணவர் மற்றவர்களை சீஷராகத் தொடங்குவார்.

” பிரதான கட்டளையாக” இருக்க வேண்டுமென்று, மத்தேயு 28:19-20 ல், சபையின் முக்கிய நோக்கத்தையும் முன்னுரிமையையும் இயேசு வெளிப்படுத்துகிறார். இந்த உண்மையின் வெளிச்சத்தில், நாம் ஒரு முக்கியமான கேள்வியைக் கருத்தில் கொள்ள வேண்டும். சீஷர்களை உருவாக்குவதே சபையின் முதன்மை நோக்கமாகவும் முன்னுரிமையாகவும் கருதப்பட வேண்டுமானால். இன்றைய விசுவாசிகளில் பலர் சீஷர் என்றால் என்ன? சீஷத்துவம் என்றால் என்ன என்று ஏன் அறியாமலிருக்கிறார்கள்? அவர்கள் அவ்வாறு செய்திருந்தால், ஏன் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்ற அழைப்புக்கு பதிலளிக்கவில்லை?

நம்முடைய கர்த்தரின் கீழ்ப்படிதல் அவருடைய பிதாவின் சித்தத்திற்கு முழுமையானதாக இருந்தது. இயேசுவின் பிரதான கட்டளையின் இன்றைய பதிப்பு என்னவென்றால், "நாம் வேலை செய்ய வேண்டும்! கிறிஸ்து இல்லாமல் புறஜாதிகள் மரித்து கொண்டிருக்கிறார்கள்; நாம் போய் அவரைப் பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டும்" என்பதாகும். இது முற்றிலும் உண்மை, ஆனால் மீதமுள்ள 19, 20 ஆகிய வசனங்கள் "போதனை" பற்றி என்ன சொல்கிறது? கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகவும் பின்பற்றுபவர்களாகவும் நாம் தேவனுடைய முழு விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையின் மாணவர்களாக மாறி, விசுவாசத்தில் தினமும் விருத்தியடைந்து, தேவனுடைய "முன்னுரிமைகள்" நமக்குள் தனிப்பட்ட முறையில் மற்றும் உள்ளே செயல்படுகிறதா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவருடனான நம் உறவு. நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும்படி தேவனை நம்பி, நம்முடைய முன்னுரிமைகள் அவருடைய சித்தத்திற்கு ஏற்ப அமைந்தவுடன், அவர் மற்றவர்களைச் சீஷராக்கும் வழியைத் திறப்பார். கிறிஸ்துவின் பிரதான கட்டளையின் மையப்பொருள் இதுதான்.

### நம் சொந்த சபைகள் மற்றும் வீடுகளுக்குள் உள்நோக்கம் இல்லாதது

சீஷராவது விருப்பத் தேர்வல்ல. எல்லா சபைகளும், விசுவாசிகளும் நமக்கு சீஷராகும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும், இது தேவனுடைய உண்மையான அழைப்பு, ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமலிருக்கிறார்கள். ஏன் செய்யாமலிருக்கிறார்கள்? ஏனென்றால், இந்த "சீஷத்துவ" செயல்முறையின் உண்மையான நோக்கம் மற்றும் தன்மையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அது என்ன என்பதை மத்தேயு 28வது அதிகாரத்தில் இயேசு கூறுகிறார். அதை சற்று ஆழமாகபார்ப்போம்.

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

இந்த வசனப்பகுதி முதலில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது, அது மிகவும் குறிப்பாக "சீஷர்களை உருவாக்குதல்" என்ற வினைச்சொல்லின் மொழிபெயர்ப்பாகும், மீதமுள்ள வாக்கியம் இந்த செயலை ஆதரிக்கிறது. "போங்கள்", "ஞானஸ்நானம்" மற்றும் "கற்பித்தல்" ஆகியவை சீஷர்களை உருவாக்குவதைக் குறிக்கிறது. மேலும், இயேசு கிறிஸ்துவினுடைய கட்டளையின் முக்கிய வலியுறுத்தலானது ஒரு கட்டாய வினைச்சொல் ஆகும், அதாவது ஒரு கட்டளை அல்லது கட்டளையை வழங்குதலாகும், இது "செய்வதையும் தொடர்ந்து செய்வதையும்" குறிக்கிறது. எனவே, சீஷத்துவத்தைப் பற்றி கொண்டிருக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார் அல்லது அறிவுறுத்துகிறார். எல்லா

காலத்திலும் ஒவ்வொரு சபையிலும் உள்ள ஒவ்வொரு விசுவாசியும் சென்று, ஞானஸ்நானம் கொடுக்க, கற்பிக்க இந்த கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இது இன்று வழக்கத்தில் இல்லை.

நாம் இப்பொது கண்டறிவது, பொதுவாக கூறும்பொழுது, மற்றவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தை கூறுவதற்காகவே வேதம் கற்பிக்கப்படுகின்றது, அத்துடன் கிறிஸ்தவ பணிதளத்தை கிறிஸ்தவ சேவையின் ஒரு பகுதியாகக் கருத மக்களை ஊக்குவிக்கின்றது. பாவத்தில் அழிந்து வருபவர்களுக்கு நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள பல நாடுகளுக்குச் செல்லுங்கள் என்று விசுவாசிகளை சபைகளும் மிஷன் போர்டுகளும் வேண்டுமென்றே ஆதரிக்கின்றன, இது நல்லது! ஆனால் இந்த வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட மற்றொரு சம அளவு முக்கியமான சத்தியம் ஒன்று உள்ளது -இது இன்று விசுவாசிகள் மற்றும் சபைகளின் மத்தியில் ஓரளவு தொலைந்து விட்டது. நம்முடைய சொந்த சபைகள் மற்றும் வீடுகளுக்குள்ளேயே போராடிக்கொண்டிருக்கும் மக்கள் நம்மிடம் உள்ளனர், அவர்களுக்கு இந்த அளவிலான உள்நோக்கம் தேவைப்படுகிறது. இயேசுவின் கட்டளை தொலைதூர நாடுகளில் உள்ளவர்களை மட்டுமல்ல, நமது உள்ளூர் மண்டலத்தில் உள்ளவர்களையும் உள்ளடக்கியது.

இந்த சிக்கல்கள் ஆழமானவை மற்றும் கனமானவை. அதனால் தான் FDM இந்த சிக்கல்களைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தும் ஒரு சீஷத்துவ செயல்முறையை ஒன்றாக இணைத்துள்ளது. நம்முடைய தேவாலயங்கள் மற்றும் குடும்பங்களில் நீங்கள் எவ்வாறு பிரதான கட்டளையை கனித்தரும்விதமாக கொண்டுவரலாம் என்பதை நாம் பார்ப்போம்.

### FDM சீஷத்துவ செயல்முறை மற்றும் திட்டம்

தேவன் தம்முடைய பிள்ளைகளில் காண விரும்பும் வளர்ச்சிக்கு இந்த சீஷத்துவம் இன்றியமையாதது என்று நாங்கள் விசுவாசிப்பதால், அவர் எங்களை வழிநடத்திய விதத்தில் புத்தகங்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம். விசுவாசத்தின் அடிப்படைகளை விளக்கும் நல்ல, வேதாகம சீஷத்துவ பயிற்சி புத்தகம் உங்கள் சபையில் இல்லையென்றால், *கிறிஸ்தவ அடிப்படை சத்தியங்கள், சீஷருக்கான உறுதியான அஸ்திபாரம்* போன்ற தலைப்புகளில் தொடக்கப் பயிற்சி புத்தகங்களை வழங்குகிறோம், இது எங்கள் www.FDM.world அல்லது www.discipleshipworkbooks.com என்ற இணைய தளத்தில் இலவசமாகக் கிடைக்கிறது. உண்மையான சீஷத்துவத்திற்கான FDM இன் அணுகுமுறை மூன்று பிரிவாக இருக்கிறது:

பகுதி 1: உறவுகளின் முன்னுரிமைகளை சீரமைத்தல்
பகுதி 2: உண்மையான சிஷ்யத்தைப் புரிந்துகொள்வது
பகுதி 3: விருப்பப்பட்டு இணைப்பதன் மூலம் கிறிஸ்துவின் முன்மாதிரியை ஏற்றுக்கொள்வது:
ஒவ்வொரு தலைவரும் சீஷர்
ஒவ்வொரு விசுவாசியும் சீஷர்

### பகுதி 1: உறவுகளின் முன்னுரிமைகளை சீரமைத்தல்

விசுவாசிகளை ஒருவரோடொருவர் இணைத்து பொறுப்புணர்வோடு வைத்திருக்கும் விதமே உண்மையான சீஷத்துவத்தின் முதன்மையான பலன்களில் ஒன்றாக இருக்கிறது, இது வேத போதனைகளுக்கு ஏற்ப இருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்க வேண்டும் என்று அவர் விரும்புவது மட்டுமல்லாமல், வேதவசனங்களை ஆராயும்படிக்கு அவர் நமக்கு அறிவுறுத்துகிறார், அதனால் மற்றவர்களின் விசுவாசப் பயணத்தில் உதவ நாம் தயாராக இருக்க முடியும். நம்முடைய பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக இந்த வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும்படிக்கும் தேவன் நமக்குச் கூறுகிறார். இதைச் சிறப்பாகச் செய்ய, ஐக்கியம் அல்லது மீண்டும் மீண்டும் ஒன்றாக கூடுவதன் மூலம் வளர்க்கப்படும் தனிப்பட்ட உறவுகள் தேவை. இருப்பினும், ஒரு உறவைச் செய்ய சரியான வழி உள்ளது. நம் வாழ்வில் உள்ள எல்லா மக்களும் ஒரே அழுத்தத்தை அல்லது முன்னுரிமையைக் கொண்டிருப்பதில்லை. நாம் நமது முன்னுரிமை உறவுகளை தேவனுடைய சித்தத்துடன் ஒத்துப்போயிருக்க வேண்டும். முன்னுரிமை தேவனில் தொடங்கி, பின்பு யாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து வேதம் தெளிவாக இருக்கிறது.

பலர் கல்லூரிக்குச் செல்வதற்கும், படிப்பதற்கும், ஒரு தொழிலுக்காக வழிகாட்டப்படுவதற்கும் பல ஆண்டுகள் செலவிடுகிறார்கள். அவர்கள் முன்னேற்றத்திற்கான வழிகளைத் தேடுகிறார்கள், அதனால் அவர்கள் பதவி உயர்வு மற்றும் அதிக சவாலான வேலைகளை எதிர்பார்க்கலாம். விளையாட்டு, பொழுதுபோக்குகளில் சிறந்து விளங்கவும், நமது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான தகவல்களைப் படிக்கவும் பயிற்சி செய்கிறோம். ஆனால், இந்த உலகத்தில் வாழும் உயிர்களின் ஒவ்வொரு பகுதிகளையும் ஆளுகை செய்கிற நம்மைப் படைத்த தேவனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு நாம் எவ்வளவு நேரத்தையும் முயற்சியை.12யும் செலவிடுகிறோம்?

கிறிஸ்துவின் சீஷர்களாக, நமது உறவுகளின் சரியான முன்னுரிமை ஒழுங்கை நாம் புரிந்து கொள்ளவது தேவையாக இருக்கிறது, பின்னர் அந்த விஷயங்களை நேர்மையான வழியில் செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். “தேடுதல்" என்பது எதையாவது அல்லது ஒருவரை அதன் தேவைகள், நோக்கம் மற்றும் முன்னுரிமைக்கு ஏற்ப பராமரிப்பது அல்லது நிர்வகிப்பதாகும்.

தேவனுடைய வார்த்தையின் மாணவராக இருப்பது, தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் எல்லாப் பொறுப்புகளையும் எவ்வாறு சரியாகச் செய்வது என்பதைக் கற்றுக்கொள்வதை உள்ளடக்குகிறது. ஆகவே, விசுவாசிகளுக்குக் தேவன் கொடுத்துள்ள மிக முக்கியமான நபர்கள் யார்? நமது உறவுகளுக்கான சரியான முன்னுரிமை வரிசை என்ன? இதை இப்போது பார்க்கலாம்.

*தேவனுடன் நாம் வைத்திருக்கும் உறவுதான் நமது முதல் முன்னுரிமை.*

தினமும் அவருடன் ஐக்கியம் கொண்டு, நிலைத்திருந்து, மேலும் அவருக்காக நேரத்தை ஒதுக்குவதன் மூலம் இந்த உறவை பலப்படுத்துகிறோம். இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, தேவாலய திரை மேலிருந்து கீழாகக் கிழிக்கப்பட்டது, இது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பிரிவினையானது சரி செய்யப்பட்டதைக் குறிக்கிறது. ஒரு தனி மனிதன் தேவனுடன் நேரடி அணுகல் மற்றும் ஐக்கியம் பெற முடியும், ஆனால் கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்பட்ட மன்னிப்பின் மூலம் மட்டுமே (மத் 27:50-51). ஒரு குழந்தை தன் தந்தையை அணுகுவது போல நாமும் தேவனை அணுகலாம் என்பதே இதன் பொருள்.

யோவான் 17ல், இயேசு தம் பிதாவுடன் கொண்டிருந்த அதே நெருங்கிய உறவை தம் சீஷர்களும் கொண்டிருக்க வேண்டும் என்று ஜெபித்தார். அவரது பிள்ளைகளாகிய நாம் அவரை "அப்பா" என்று அழைக்க முடியும் என்பதையும், *ஊக்கம், ஐக்கியம் மற்றும் அன்புக்காக ஒரு தந்தையின் மடியில் தவழும் குழந்தையாக அவரிடம் வர முடியும்* என்பதையும் இந்த மொழிநடை குறிக்கிறது. கற்றுக்கொள்வதன் மூலம் கிறிஸ்தவர்கள் இதைச் செய்யலாம்:

- தேவனுடன் இருக்க ஒவ்வொரு நாளும் நேரத்தை ஒதுக்குவதன் முக்கியத்துவம்.
- தேவனுடன் பேசுவது, நன்றி செலுத்துவது, அவரை துதிப்பது மற்றும் அவருடைய உதவியைக் கேட்பது.
- அவரிடமிருந்து அறிவுறுத்தல் மற்றும் ஐக்கியம் பெறும் நோக்கத்திற்காக அவருடைய வார்த்தையை வாசிப்பது.
- படித்ததை தியானிக்கவும், கற்பிக்கப்படும் கருத்துக்களை நம் மனதில் நிறுத்திரக் கொள்ளவும் கருத்தில் கொள்ள வேண்டும்.

“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்” என்று யோவான் 15:7 நமக்கு கூறுகிறது. வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு தேவனில் நிலைத்திருப்பது மிகவும் முக்கியமானது. இதன் பொருள் “தொடர்ந்து உறவில் நெருங்கி, சார்ந்து நிலைத்திருப்பது" என்பதாகும். கிறிஸ்தவர்கள் இதைச் செய்யும்போது, அவர்கள் மிகுந்த *கனியைக் கொடுப்பார்கள்* என்று தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார்! இயற்கையாகவே கொடியில் கனி தோன்றுவது போல, அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளருவார்கள். “நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல், உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” என்று யோவான் 15:5 கூறுகிறது. இயேசுதான் திராட்சைச் செடி, நாம் கிளைகள். கொடி செடியில் இருந்து தனியாக பிரிக்கப்படும் பொழுது கனி கொடுக்க முடியுமா? "என்னாலே அல்லாமல்[இயேசு], உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" என்று வசனம் கூறுகிறது. அவர் இல்லாமல் நாம் ஆவிக்குரிய வாழ்வில் எவ்வளவு வளர முடியும்? நாம் சொந்தமாக எதையும் உற்பத்தி செய்ய முடியாது. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர், அவருடைய வார்த்தை மற்றும் அவருடைய வல்லமையை நாம் முழுமையாகச் சார்ந்திருக்கிறோம். தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமானால், கிறிஸ்துவில் நாம் நிலைத்திருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

*திருமணமாகியிருந்தால், தேவனுக்குப் பிறகு எல்லா உறவுகளிலும் நம் மனைவிக்கு இரண்டாவது முன்னுரிமை உண்டு*

திருமணம் என்பது தேவனுக்கு முதன்மையானது என்று வேதத்தில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது, ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவ தம்பதிகள் தேவனுடைய வார்த்தையின்படி ஒருவரையொருவர் கவனித்துக்கொள்வதை பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். சபையில் உள்ள விவாகரத்து விகிதம் இந்த உண்மைக்கு சாட்சியமளிக்கிறது. எபேசியர் 5 ஆம் அதிகாரம் கணவனும் மனைவியும் ஒரு

வெற்றிகரமான திருமணத்தை நடத்த வேண்டுமானால், எப்படி ஒருவரோடு ஒருவர் உறவாட வேண்டும் என்பதைப் பற்றி தெளிவாகப் பேசுகிறது.

> மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராய் இருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:22-24).
>
> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபேசியர் 5:25, 27)

*தேவன் மற்றும் வாழ்க்கைத் துணைக்கு அடுத்தபடியாக முதன்மையான உறவுகள் நம் குழந்தைகள்.*

நமது குடும்பங்களைக் கவனிப்பது தேவனுக்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் ஆரோக்கியமான குடும்பம் என்பது சமுதாயத்தின் அடித்தளம் என்று தேவன் அறிந்திருக்கிறார். பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் வைத்திருக்கும் உறவுகளை தங்கள் மனைவியோடு வைத்திருக்கும் உறவை விட முக்கியமாக கருதுகிறார்கள், இது தவறான முன்னுரிமை வரிசையாகும். உறுதியான திருமண உறவுகள் இல்லாமல், குடும்பம் குழப்பத்தில் உள்ளது. குடும்பத் தலைவனாக, கர்த்தருடைய வழிகளில் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும்படி தேவன் தகப்பன்மார்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (எபேசியர் 6:4). நான் பல ஆண்டுகளாக பல ஆண்கள் குழுக்களுடன் பேசியிருக்கிறேன். நம் குடும்பங்களை பராமரிப்பது சம்பந்தமாக தேவனுடைய சித்தத்தை கற்பிப்பதில் இருந்து நாம் எவ்வளவு தூரம் விலகி இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த நான் பொதுவாக பின்வரும் கேள்விகளை அவர்களிடம் கேட்டிருக்கிறேன்:

- எத்தனை ஆண்கள் பத்து வருடங்களுக்கும் மேலாக வேலையில் இருக்கிறார்கள்? அந்த வேலையைச் செய்ய எத்தனை பேர் பள்ளிக்குச் சென்றனர் அல்லது பயிற்சி பெற்றனர்? (பெரும்பாலானவர்கள் பதிலுக்கு கையை உயர்த்துகிறார்கள்.)
- உங்கள் வேலையைச் செய்ய இன்னொரு மனிதனைப் பயிற்றுவிப்பதில் எத்தனை பேர் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்? (மீண்டும், பெரும்பாலானவர்கள் கையை உயர்த்துவார்கள்.)
- எத்தனை பேருக்கு திருமணமாகி பத்து வருடங்களுக்கு மேலாகிறது? (வழக்கமாக, 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் கையை உயர்த்துகிறார்கள்.)
- தேவனுடைய வார்த்தையின்படி கணவனாக அல்லது பெற்றோராக இருப்பது எப்படி என்பதை இன்னொரு மனிதனுக்குக் கற்பிக்கும் அளவுக்கு எத்தனை பேர் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்? (பெரும்பாலும், ஒரு கை கூட உயர்த்தப்படவில்லை.)

சுருக்கமாக, நான் இன்னொரு கேள்வியைக் கேட்டேன். "உங்கள் வேலைத் திறன்களைப் பற்றியோ அல்லது கர்த்தருடைய பிள்ளைகளில் ஒருவரான உங்கள் மனைவியிடம் நீங்கள் எவ்வளவு நன்றாகப் பழகுகிறீர்கள் என்பதைப் பற்றியோ கர்த்தர் அதிக அக்கறை காட்டுகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" தேவன் நமக்குக் கொடுத்த பொறுப்புகளை நாம் எவ்வளவு சிறப்பாகச் செய்தோம் என்பதை ஒரு நாள் நாம் அனைவரும் கணக்கொப்புவிக்க வேண்டும்.

உங்கள் தலைவர்களுக்கும் சபையில் உள்ளவர்களுக்கும் அவர்களுடைய உறவுகளின் சரியான முன்னுரிமை வரிசையைப் புரிந்துகொள்ள உதவுவது சீஷத்துவத்தின் முதல் படியாகும். ஏன் புரிந்துக்கொள்ள வேண்டும்? ஏனென்றால், உறவுகளின் முன்னுரிமை வரிசையின் உறுதியான போதனை இல்லாமல், தேவன் கூறும் விஷயங்களை தவிர்த்து, அவ்வளவு முக்கியமில்லாத விஷயங்களில் மக்கள் எல்லா வகையான ஆற்றலையும் நேரத்தையும் செலவிடுவார்கள். இந்த பகுதியை நாம் சரியாகப் புரிந்துக்கொண்டால், நம் வாழ்வின் மற்ற பகுதிகள் அனைத்தும் வரிசையாக இருக்கும். நம்மில் பலருக்கு இது கடினமான விஷயம். ஆனால் இதன் மூலம் நான் உங்களை ஊக்குவிக்கிறேன்:

> நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன் (பிலிப்பிர் 3:12).

இந்த நினைவூட்டல் யாரையும் சீரழிப்பதற்காக அல்ல, ஏனென்றால் நம்மில் யாரும் தேறினவனாக இருக்க மாட்டோம். ஆனால் பவுல் மேலே உள்ள இந்த வசனத்தில், "தொடருகிறேன்" என்று கூறுகிறார்,

அதாவது தேவனுடைய சித்தத்தை இருதயத்தில் எடுத்துக்கொண்டு அதை நம்முடைய எதிர்காலத்திற்கு முன்னேற்றம் கொண்டு வரும்படிக்கு நடைமுறைப்படுத்த வேண்டும். தேவன் அவருடைய வார்த்தையின்படி செய்யச் கூறுவதை நாம் அனைவரும் தொடர்ந்து கற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். ஒரு சீஷர் தனது குருவைப் போல் ஆக வேண்டும் என்ற விருப்பத்துடன் அவரை பின்பற்றுபவர், மேலும் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, கிறிஸ்துவைப் போல மாறுவதே குறிக்கோள், இதைத் தான் FDM சீஷத்துவ திட்டத்தின் இரண்டாம் பகுதி குறிக்கிறது.

## பகுதி 2: உண்மையான சீஷத்துவத்தைப் புரிந்துகொள்வது

மத்தேயு 28:19-20 ன் கட்டளையை நிறைவேற்றுவதற்கு சீஷத்துவம் என்றால் என்ன என்பதைப் பற்றி சபையில் உள்ள தலைவர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு கற்பிப்பது மிக முக்கியமானது. மேலும், அவர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதற்கு அப்பாற்பட்டு, நமது சொந்த மக்களிடம் பிரதான கட்டளையை எடுத்துச் செல்வதில் சபையானது மிகவும் பலவீனமாக உள்ளது. தேவனுடைய வார்த்தையை அறிந்து, அதற்கு கீழ்ப்படிவதற்கு போதனைகளும் அறிவுறுத்தல்களும் மற்றும் சிட்சைகளும் தேவைப்படுகிறது. ஒரு மனிதன் முதலில் கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்த பின்னரே சீஷராக இருக்க முடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்; மத்தேயு 28:19-20 பரிசுத்தவான்களை மேம்படுத்துவதை வலியுறுத்துகிறது. அந்த பரிசுத்தவான்களே நமது இலக்கு மக்கள். சீஷன் என்ற வார்த்தையின் பின்வரும் வரையறையைப் பார்ப்போம்.

> *சீஷன் (Disciple*, "Mathētḗs மதிடெஸ்,") என்ற பெயர்ச்சொல்லானது ஒரு மாணவர், கற்பவர் ஆகியவற்றை குறிப்பிட்டாலும், புதிய ஏற்பாட்டில் இவற்றை விட மேலான பொருளைத் தருகிறது. தனக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரையை ஏற்று அதைத் தன் நடத்தை விதியாக மாற்றிக்கொண்டு அவற்றை பின்பற்றுபவனே. சீஷன் கிளாசிக் கிரேக்க மொழியில், "மதிடெஸ்" என்பவனை "ஒரு பயிற்சிபெறுபவன்" என்று அழைக்கப்படுகிறான், அவன் ஆசிரியரிடமிருந்து சத்தியங்களை மட்டுமல்ல, அவருடைய அணுகுமுறைகள் மற்றும் தத்துவங்கள் போன்ற பிற விஷயங்களையும் கற்றுக்கொள்கிறான். இதன்படி, "மதிடெஸ்" என்பவனை "மாணவன்-தோழன்" என்று நாம் அழைக்கலாம், அவன் விரிவுரைகளைக் கேட்டு வகுப்பில் உட்கார்ந்து கொள்வது மட்டுமல்லாமல், வாழ்க்கையையும் சத்தியங்களையும் கற்றுக்கொள்வதற்கு, படிப்படியாக முன்னேறுவதற்கும் ஆசிரியரின் தன்மைகளை பின்பற்றுபவன்.

சுருக்கமாகச் கூறுவதென்றால், ஒரு சீஷன் என்பவன் கற்பவன், ஒரு பயிற்சிபெறுபவன், அவன் விரும்பினால், ஆசிரியரின் குணாதிசயத்தை எடுத்துக்கொள்வது அவனுடைய குறிக்கோள். ஆகவே, கிறிஸ்துவின் சீஷர் என்றால், அவர்களின் மனப்பான்மைகள், குணாதிசயங்கள், தத்துவங்கள், கண்ணோட்டங்கள் மற்றும் செயல்களில் கிறிஸ்துவைப் போல் மாற முயற்சி செய்பவர். புதிய ஏற்பாட்டில் "சீஷர்" என்ற வார்த்தை 269 முறை குறிப்பிடப்பட்டுள்ளது, இது ஒரு கிறிஸ்தவ சீஷரை நான்கு வெவ்வேறு வழிகளில் விவரிக்கிறது:

### 3.ஒரு சீஷன் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவன்.

> அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோவான் 1:12)

வேதாகமத்தின்படி, ஒரு சீஷனானவன் இயேசுவை விசுவாசித்து, அவருக்கு ஒப்புக்கொடுத்து பின்பற்றுகிறவன். ஒரு சீஷனாக விரும்புகிறவன். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் தான் ஒரு பாவி என்பதை முதலில் உணர வேண்டும் (ரோமர் 3:23; 6:23); அவன் தன் பாவத்தை தேவனிடம் அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9); அவன் மனந்திரும்ப வேண்டும் அல்லது தங்கள் பாவத்திலிருந்து விலக வேண்டும் (மத்தேயு 3:2, 8; 4:17; அப்போஸ்தலர் 2:38); மேலும் இயேசுவின் சிலுவை மரணம் அவர்களின் பாவத்திற்கு ஈடாக கொடுக்கப்பட்டது என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். ஒரு மனிதன் இயேசுவை உண்மையாக விசுவாசித்தால், அவர் தன் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு, வேதத்தில் விவரிக்கப் பட்டிருப்பதுப் போல மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று ஏற்றுக் கொள்ளும்போது, அவர்கள் தேவனுடன் ஒரு உறவை மீட்டெடுக்கிறார்கள் மற்றும் அவருடைய சமுகத்தில் நித்திய ஜீவனை பெறுகிறார்கள் (ரோமர் 10:9– 10; 2 கொரிந்தியர் 5:21; 1 யோவான் 2:1-2). இரட்சிப்பின் தருணத்தில், பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனுக்குள் பிரவேசிக்கிறார், மேலும் இதனை கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருப்பதாக வேதம் விவரிக்கிறது (அப் 2:38). தேவனுடைய திட்டத்தின்படி இரட்சிப்பு இல்லாமல் எந்த மனிதனும் அவருடைய உண்மையான சீஷராகவும் பிள்ளையாகவும் இருக்க முடியாது. மேலும் இந்த போதனையானது சீஷராகத் தொடர்வதற்கு

இன்றியமையாதது, ஏனென்றால் "ஜென்ம சுபாவமுள்ள" அல்லது இரட்சிக்கப்படாத மனிதன் தேவனுடைய விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியாது என்று வேதம் கூறுகிறது (1 கொரிந்தியர் 1:14, 18).

## 1. ஒரு சீஷன் வேத வார்த்தையின் மாணவன்.

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2 தீமோத்தேயு 2:15).

மேலும் இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; என்று கூறினார் (யோவான் 8:31).

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு சீஷன் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திற்கும் தேவனின் சித்தத்தைக் கற்றுக்கொள்ள தேவையான நேரத்தை செலவிடுகிறான். ஒவ்வொரு விசுவாசியும் கீழ் காண்பவற்றை கற்பது தேவனின் விருப்பம்:

- இயேசு யார் மற்றும் அவர் என்ன செய்தார் என்பது பற்றிய சத்தியம்.
- ஒவ்வொரு நாளும் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருப்பது எப்படி.
- நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்.
- அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு வாக்குறுதிகள்.
- நீதியாக எப்படி நடக்க வேண்டும்.

வேதத்தைப் படிப்பதன் மூலம் மட்டுமே நாம் இவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்.

## 2. தான் கற்றுக்கொண்டதைக் கீழ்ப்படிந்து மற்றும் கடைப்பிடித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தேவனுடைய வார்த்தையைப் பெறுபவனே சீஷன்.

> அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக்கோபு 1:22).
>
> நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராய் இருப்பீர்கள் (யோவான்J 15:7–8).

இன்று எத்தனை கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையைத் தங்களின் தேர்ந்தெடுக்கக்கூடிய பரிந்துரைகளின் பட்டியலாகக் கருதுகிறார்கள்? தேவனுக்கு மகிமை சேர்ப்பதே அவர்களின் நோக்கம் என்பதை எத்தனை பேர் புரிந்துகொள்கிறார்கள்? எத்தனை விசுவாசிகள் கீழ்ப்படியாமைக்காக தேவனின் கிருபையை இலவச சவாரியாக பயன்படுத்துகிறார்கள்? நாம் நம் பாவத்திற்காக வருத்தப்படுகிறோமா, மனந்திரும்புதல் மற்றும் கீழ்ப்படிதல் பற்றி தீவிரமாக இருக்கிறோமா அல்லது நம் அறியாமை மற்றும் பாவமான "தவறுகளுக்கு" சாக்குப்போக்கு சொல்கிறீர்களா?

இன்று, அமெரிக்காவில், 40 சதவீதத்திற்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் மன அழுத்த எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்வதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. இருபதுக்கும் மேற்பட்ட வருட ஆலோசனை ஊழியத்தில், மனச்சோர்வை அனுபவிக்கும் பெரும்பான்மையான மக்கள் தேவன் தம்முடைய வார்த்தையில் என்ன வழங்கியுள்ளார் என்பதை அறியாதவர்களாகவோ அல்லது கவனியாதவர்களாகவோ இருப்பதை நான் கண்டேன். கீழ்ப்படியாமல் வாழ்ந்தால் விளைவு உண்டு. மன அழுத்தம் உள்ளவர்களெல்லாரும் தேவனுடைய விருப்பத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று நான் கூறவில்லை, ஆனால் அதிருப்தி, கோபம், கசப்பு, பயம் மற்றும் பலவற்றின் நீண்டகால அணுகுமுறைகள் மனச்சோர்வுக்கு வழிவகுக்கும்.

வாழ்க்கை சில சமயங்களில் பெரும் அழுத்தத்தை தரலாம், ஆனால் தேவனை துதிக்கும்போது அவரிடம் பதில் இருக்கிறது. கலாத்தியர் 5:22, ஆவியில் நடப்பது அன்பு, சந்தோஷம் மற்றும் சமாதானத்தின் வாழ்க்கையை விளைவிக்கும் என்று கூறுகிறது. இது ஒரே நேரத்தில் நடக்காது, ஆனால் ஒரு மனிதன் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய முற்படும்போது அது வளரும். ஒரு கிறிஸ்தவர், அறியாமை அல்லது எதிர்த்து நிற்பதால், தேவனின் சித்தத்தின்படி நடக்காத போது என்ன நடக்கும்? அன்பு, மகிழ்ச்சி மற்றும் அமைதி ஆகியவற்றிற்கு நேர்மாறாக குழப்பம், சந்தேகம், பதட்டம் மற்றும் இறுதியில் மனச்சோர்வும் ஏற்படுகிறது. நாம் அனுபவிக்கும் துன்பங்கள் நம்மை நாமே பரிசோதிக்கவும், தேவனுடைய சித்தத்தையும், நாம் வழிதவறிப் போன இடத்தில் மன்னிப்பையும் பெறவும், அவருடைய சித்தத்தைச் செய்யத் தொடங்கவும் நம்மைத் தூண்டும் என்று நம்புகிறோம்.

வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட அளவு துன்பங்களும் சிரமங்களும் இயல்பானவை, எதிர்பார்க்கப்பட வேண்டியவை, நம் பாவம், அறியாமை அல்லது தேவனிடமிருந்து விலகி நாம் சுதந்திரமாக இருப்பது ஆகியவற்றிலிருந்து நம்மைத் திருப்புவதற்கும் நல்லது. பாவத்திற்காக துன்பப்படுவதற்கு தேவன் நம்மை அனுமதிக்கிறார், மேலும் சூழ்நிலைகளில் நம்மை ஒழுங்கு படுத்துகிறார், ஏனென்றால் அவர் ஒரு நல்ல, அன்பான தகப்பன், நம் ஒவ்வொருவரிடமும் அவர் தொடங்கிய வேலையை முடிப்பதாக வாக்குத்தத்தம் பண்ணினதில் உண்மையுள்ளவர்.

> அன்றியும்: "என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்." (எபிரெயர் 12:5–6)

> உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுது என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் (பிலிப்பியர் 1:6).

ஒரு சீஷன் தான் கடைப்பிடிப்பதற்கான தேவனுடைய நேரடி அறிவுறுத்தலாக வேதத்தை கருதுகிறான். மேலும் கீழ்ப்படியாமை பற்றிய விழிப்புணர்வு மனந்திரும்புதலுக்கான ஒரு காரியமாகும், மேலும் நீதியில் நடக்கத் தொடங்குவதற்கு சுய விருப்பத்தோடு விசுவாசம், ஜெபம் மற்றும் பரிசுத்த ஆவியின் வல்லமையை சார்ந்து இருக்க வேண்டும்.

### 4. ஒரு சீஷர் குணத்திலும் நடத்தையிலும் படிப்படியாகவும் சீரானதாகவும் இயேசுவின் சாயலாக மாறுவதை வெளிப்படுத்துவார்.

> சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான் (லூக்கா 6:40).

சில மதங்கள் தவறாகக் கற்பித்ததைப் போல நாம் ஒருபோதும் கடவுளர்களாக இருக்க மாட்டோம், கிறிஸ்துவைப் போல நாம் ஒருபோதும் பரிபூரணமாக இருக்க மாட்டோம். அவர் நம் பாவத்தை மூடுபவராக இருக்கிறார், அவருடைய பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார், நம் வார்த்தைகளும் செயல்களும் காலப்போக்கில் தேவனை மென்மேலும் மகிமைப்படுத்த வேண்டும். கற்றல், அர்ப்பணிப்பு மற்றும் நீதியை அப்பியாசப்படுத்துதல் ஆகியவை பயிற்சியில் அடங்கியுள்ளது.

சீஷன் என்றால் என்ன, அவர்களுக்கு என்ன குணாதிசயங்கள் இருக்கும் என்பதை இப்போது நாம் அறிந்துக் கொண்டோம், ஆனால் உண்மையான சீஷத்துவத்தில் வேறு என்னவெல்லாம் இருக்கிறது? இதை இப்போது பார்க்கலாம்.

## சீஷராக்குபவர் என்பவர் யார்?

கர்த்தர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் பலவிதமான வரங்களைத் தருகிறார் - சிலர் போதகர்களாகவும், வாலிபர் மத்தியில் ஊழியம் செய்பவர்களாகவும், இசை இயக்குநர்களாகவும், இன்னும் பலவாறு அழைக்கப்படுகிறார்கள், ஆனால் *ஒவ்வொரு விசுவாசியும் சீஷராக்குபவராக அழைக்கப்படுகிறார்கள்*. அதாவது, ஒவ்வொரு கிறிஸ்தவரும், தேவனுடைய வார்த்தையை மற்ற விசுவாசிகளின் தேவைகளுக்கு ஏற்ப அப்பியாசப்படுத்தி ஒரு நெருங்கிய உறவிற்கு கொண்டு வந்து, இயேசு செய்தது போல் ஒரு நோக்கத்துடன் தொடர்ந்து செய்யும் முதிர்ச்சியடைந்த ஒரு நிலைக்கு வர வேண்டும். சீஷத்துவம் என்பது வாழ்க்கையின் ஒரு பருவத்தில் மற்றொருவருடன் அல்லது மற்றவர்களுடன் நேரத்தை செலவிடுவது, அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதற்கு ஊக்குவிப்பதன் மூலமும், அறிவுரை வழங்குவதன் மூலமும், தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளவும் கீழ்ப்படியவும் அவர்களுக்கு உதவுவதாகும். "சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்று மத்தேயு 28:19 கூறுகிறது என்பதை நினைவில் வையுங்கள். இந்த விஷயத்தில், சகல ஜாதிகளையும் என்பது எல்லாரையும் குறிக்கிறது, அதுதான் இதன் அர்த்தம்!

போதகர்கள், ஆராதனைத் தலைவர்கள், வேதப்பாட தலைவர்கள் அல்லது மற்ற சாதாரண ஊழியர்களுக்கு இந்த அழைப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா? இல்லை. உண்மையில், வழிநடத்துபவர்களிடமிருந்து தேவன் அதிகம் எதிர்பார்க்கிறார். இதைப் பற்றி வேதம் கூறுவதைப் பாருங்கள்:

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 13:16)

"நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (தீத்து 2:7).

தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள். (எபிரெயர் 13:7)

இயேசு சிறந்த போதகர், ஆனால் சீஷர்கள் அடிக்கடி அவருடைய போதகத்தை நிறுத்தி, "நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று விளக்கங்கேட்கவும், அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் அவர் விரும்பினது, அவர்களைச் சீஷராக்குவதை விட, சுகப்படுத்துதல் அல்லது பிரசங்கித்தல் போன்ற ஊழியத்தின் மற்ற அம்சங்கள் முக்கியமானவை அல்ல என்பதை நிரூபித்தது! இயேசுவின் வாழ்க்கை, மற்றவர்களை சீஷராக்குவதில் தேவன் கொடுக்கும் மதிப்பையும் முன்னுரிமையையும் வெளிப்படுத்தியது. மத்தேயு 9:35-38 இல், வேலையாட்களை அதிகமாக அனுப்புவதற்காக ஜெபிக்கும்படி இயேசு அப்போஸ்தலர்களிடம் கூறினார்:

“பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.அவர், திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் (அறுவடையின் எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்” என்றார்.

ஒரு அறுவடை வேலைக்காரன் என்பவன் ஆவிக்குரிய வேலை செய்பவன் மட்டுமல்லாமல் அவன் ஒரு சீஷனும் ஒரு சீஷனை உருவாக்குபவனுமாக இருக்கிறான். ஒவ்வொரு விசுவாசியும் இந்த அறுவடை வேலையின் கோட்பாட்டில் தகுதி பெறுகிறார்கள். ஆனால், எத்தனை விசுவாசிகள் கிறிஸ்துவை மிகவும் உண்மையாகப் பின்பற்றுகிறார்கள்? அவர்களில் எத்தனைப் பேர் புதிய விசுவாசிகளை வழிநடத்த, கற்பிக்க அல்லது முன் மாதிரியாக இருக்க தகுதியுடையவர்கள்? ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த உழைப்பு ஆற்றலுக்கு ஏற்றதொரு வேலைக்காரன். இயேசு அப்போது மனந்திரும்புதலுக்கேற்ற மனதுக்கத்தை, இப்போதும் கொடுக்கிறார். இயேசு கிறிஸ்து ஒரு நபரை இரட்சிக்கிறார், அங்குதான் நமது வேலை தொடங்குகிறது, அவர் செய்தது போல் அவர்களை சீஷராக முதிர்ச்சியடையச் செய்கிறார். ஆம், நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் மற்றும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அழைப்பு கொடுக்க வேண்டும், ஆனால் சீஷர்களை உருவாக்குவதும் சமமாக முக்கியமானது! இதை எப்படி செய்வது?

"சீஷர்களை உருவாக்குவது" என்பது கிறிஸ்துவைப் போல மாறுவதற்கு உதவுவது. இது தலைமைத்துவத்துடன் தொடங்குகிறது,

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்-காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:11–12)

கோட்பாடு என்னவெனில் சபைத் தலைவர்கள் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் நெருக்கமாக பின்பற்றுவதன் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து, தேவன் அவர்களது வாழ்க்கையின் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொடுத்த காரியங்களை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்களை கற்றுக் கொடுப்பவராக அவர் மாற்றுவார். (2 தீமோத்தேயு 2:2). பின்வரும் வரையறையை நீங்கள் படிக்கும்போது, சீஷர்களை உருவாக்குவதற்கான அடிக் கோடிட்ட குறிப்புகளை விசேஷமாக கவனியுங்கள். நீங்கள் உற்று நோக்கினால், கிறிஸ்து தம் சீஷர்களுக்குத் தெரிவித்த நோக்கம் மற்றும் செயல் முறையை இந்த

வரையறை விவரிக்கிறது என்பதை கவனிப்பீர்கள். இந்த வரையறையை தியானிக்க இந்த நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

> *சீஷரை உருவாக்குதல்*: ஒரு வினைச்சொல், "Matheteuo, மத்தெடெஸ்" என்பது இதன் கிரேக்க வார்த்தை, சீஷராக்கும் நோக்கத்துடன் ஒருவரை உருவாக்குவதே இதன் பொருள் (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 14:21; மத்தேயு 13:52). இது "மன மாற்றம்" என்ற வார்த்தைக்கு சமமான வார்த்தை இல்லையென்றாலும், ஆனால் அது நிச்சயமாக அதையும் குறிக்கப்படுகிறது. "சீஷர்களை உருவாக்கு" என்ற சொல்[1] புது விசுவாசிகள் எவ்விதம் கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும், கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுப்பது, அவருடைய மனதுருக்கத்தின் சேவையை அவருடைய பணியாக ஏற்றுக்கொள்வது என்பதை கற்றுக்கொண்டு மனதையும், இருதயத்தையும் சுயசித்தத்தையும் தேவனுக்காக ஆண்டுகொள்ளுகிற உண்மையை வலியுறுத்துகிறது.[2] இயேசுகிறிஸ்துவோடு மக்களை உறவுக்குள்ளாக கொண்டு வந்து, போதிக்கவும், அவருடைய நுகத்தை தங்கள் மீது உரிமையோடு ஏற்றுக் கொண்டு அவருடைய சரியான சித்தத்துக்கு தங்களை ஒப்புவிப்பது. (மத்தேயு 11:29).[3]

பவுல் தனது முழு ஊழியத்திலும் இந்த நடத்தையை உண்மையாகவே எடுத்துக்காட்டினார். அவர் எபேசுவில் மூன்று ஆண்டுகள் கழித்தார், மேலும் விசுவாசிகள் சீஷத்துவத்தில் முதிச்சியடையும் படியாக தினப்பட்ட விதத்தில் அவர், "தேவனின் முழு ஆலோசனையை", அளித்தார். (அப்போஸ்தலர் 20: 27-31). மற்ற விசுவாசிகளுக்கு கற்பிப்பதில் தங்கள் ஆற்றல் மற்றும் நேரத்தை செலவிட வேண்டும் என்று அவர் தலைவர்களை சீஷராக்கி மற்றும் அதையே செய்ய அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார் (2 தீமோத்தேயு 2: 2). பவுலும் பர்னபாவும் லிஸ்த்ரா, இக்கோனியா மற்றும் அந்தியோக்கியாவில் உள்ள "சீஷர்களின் ஆத்துமாக்களை திடப்படுத்தவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கு அவர்களுக்கு புத்திச் சொல்லும்படிக்கும்" மீண்டும் வந்தார்கள் (அப்போஸ்தலர் 14: 21-22). திடப்படுத்துதல் என்றால் புது விசுவாசிகள் கர்த்தருடைய கட்டளைகளில் நிலைத்திருந்து கீழ்ப்படியும்படிக்கு உற்சாகப்படுத்தி துரிதப்படுத்துதல் ஆகும்.

இப்போது நாம் FDM சீஷத்துவ திட்டத்தின் உள்ளான நோக்கத்துடன் இணைக்கப்பட்ட கிறிஸ்துவின் பரிமாற்றத்தை மாற்றியமைத்தல் என்ற மூன்றாம் பகுதிக்கு வருகிறோம்.

## பகுதி மூன்று: உள்ளான தொடர்பினிமித்தம் கிறிஸ்துவின் மாதிரியை ஏற்றுக்கொள்ளுதல்.

மற்றவர்களை சீஷராக்குவது எப்படி என்பதற்கு இயேசு கிறிஸ்து சிறந்த உதாரணத்தை கொடுத்தார்! இயேசு கூறினார்,

> நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15:7)

இயேசு பன்னிரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கற்பித்தார்; அவருடைய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணின பிறகு அவர்கள் அவருடைய சபையை ஸ்தாபித்தார்கள். இந்த அப்போஸ்தலர்கள் இயேசு அவர்களுக்குக் கற்பித்த அனைத்தையும் மற்றவர்களுக்கு போதிப்பதற்கு உண்மையுள்ள தலைவர்களாகவும் போதகர்களாகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

சீஷத்துவம் அல்லது சீஷராகுதல் என்பது மக்கள் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பவர்களாக மாறுவதற்கு நாம் பின்பற்றும் செயல்முறையாகும். இந்தக் குறிப்பிட்ட வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் போதித்த விதம், மத்தேயு 28:19-20 மற்றும் புதிய ஏற்பாட்டின் பிற வசனங்களில் இந்தக் கருத்து தெளிவாகத் தெரிவிக்கப்படுகிறது. நாம் இப்போது கற்றுக்கொண்ட வரையறைகளுக்கும், சீஷத்துவ செயல்முறைக்கும் இடையே உள்ள தொடர்பை இந்த ஆய்வு காண்பிக்கும், குறிப்பாக இது உங்கள் மண்டலத்தில் உள்ளவர்களுடன் தொடர்புடையது. சீஷராக்குவதின் இந்த வரையறையும், சபைத் தலைவர்கள் மற்றும் விசுவாசிகளாக நாம் பயன்படுத்த வேண்டிய வேதாகம கருத்துக்களையும் கிரெக் ஆக்டன் என்பவரும் விவரிக்கிறார்.

> சீஷராக்குதல் அல்லது சீஷத்துவம்: "சீஷராக்குதல் என்பது ஒரு விருப்பத்துடன் ஏற்படுத்தப்படும் உறவாகும், இதில் கிறிஸ்துவில் முதிர்ச்சியை நோக்கி வளரும்படிக்கு அன்பில் ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும், ஆயத்தப்படுத்தவும் மற்றும் சவால் விடவும் மற்ற சீஷர்களுடன் சேர்ந்து நடக்கிறோம். மற்றவர்களுக்குக் கற்பிக்க சீஷரைத் தயார்படுத்துவதும் இதில் அடங்கும்".

இந்த வரையறை அனைத்து சீஷத்துவத்துக்கும் தொடர்புடையது என்றாலும், நான் அதை குறிப்பாக சபையிலுள்ள தலைவர்களுக்கும் சபையுடனான அவர்களின் உறவுக்கும் தொடர்புபடுத்த விரும்புகிறேன். சீஷத்துவமானது ஒரு சபை என்ன செய்ய வேண்டும் என்பதை விவரிக்கிறது, மேலும் கிறிஸ்து தமது சீஷர்களுடன் என்ன செய்தார் என்பதை வரையறுக்கிறது. சபையில் உண்மையாக விசுவாசிகளான சீஷர்கள் என்பது அவர்களுடன் விருப்பதுடன் தொடர்புக்கொள்வதைக் குறிக்கிறது. இது நமது பொறுப்பு. இயேசு தம்மைப் பின்பற்றுமாறு அல்லது தம்முடன் நடக்க வேண்டுமாறு, சீஷர்களை அழைத்தார், ஆனால் அவர் முதல் படியை எடுத்து விருப்பத்துடன் செய்தார். திட்டமிட்ட உறவுகள் தற்செயலாக நிகழவில்லை என்பதை நாம் உணர வேண்டும்; முன்னரே தீர்மானிக்கப்பட்ட திட்டம் பராமரிக்கப்பட்டு சீரானதாக இருக்க வேண்டும். இந்தச் சிறு புத்தகம் அதைப் பற்றியது - சீஷத்துவ செயல்முறையைத் தொடங்க உங்களுக்கு உதவும் ஒரு திட்டத்தை உங்களுக்கு வழங்குகிறது.

கற்றலில் நேரத்தையும் கவனத்தையும் செலவிடாமல் ஒரு சீஷன் தனது விசுவாசத்தில் முன்னேற முடியாது. பல குடும்பங்கள் இன்று சிக்கலில் உள்ளன, ஏனென்றால் அவர்களுக்கு உதவும்படிக்கு கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை, அல்லது தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொண்டு பின்பற்றுவதில் அவர்கள் அழுத்தம் கொடுக்கவில்லை. பல கிறிஸ்தவ தம்பதிகள் தேவன் தங்களிடம் விரும்புவதை விட மிகக் குறைவான உறவுகளில் திருப்தியடைகிறார்கள். தங்களுக்குத் தேவையான உதவிகளை எங்கு பெறுவது என்று தெரியாதவர்கள் எத்தனை பேர்? வார இறுதிக் கூடுகைகள் ஒய்வுகள், புத்தகங்கள் மற்றும் ஆலோசனைகளும் கூட பிரச்சினைகளை தீர்க்காததுப்போன்று காணப்படுகிறது.
புத்தகங்களிலும் கூடுகைகளிலும் சிறந்த பதில் இருக்கும் என்று இயேசு குறிப்பிட்டாரா? அவர் அப்படி கூறவில்லை.

> நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்று அவர் கூறுகிறார் (யோவான் 13:15).

கூடுகைகள் மற்றும் ஆலோசனைகள் உதவியாக இருக்கும் என்பதை சபை புரிந்து கொள்ள வேண்டும், ஆனால் கிறிஸ்தவ வாழ்வில் வெற்றிபெற மக்களை தயார்படுத்தும் போது அவை சீஷத்துவத்திற்கு மாற்றாக இருப்பதில்லை.

இயேசு எப்பொழுதும் தனிப்பட்ட முன்மாதிரி மற்றும் தனிப்பட்ட உறவை பாவத்திற்கு எதிரான முதல் போர் களமாக பரிந்துரைக்கிறார். ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் மற்றொருவரின் முன்னேற்றத்தில் தங்களை முதலீடு செய்யத் தயாராக இருக்கும் ஒருவருடன் உறவில் நேரம் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. துன்பம் மற்றும் சோதனையின் மூலம் முயற்சி செய்யப்பட்டு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்ட ஒரு விசுவாசியின் முயற்சி—இப்போது மற்றொருவருடன் அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து வரவும், வழிகாட்டவும், கற்பிக்கவும் மற்றும் பலப்படுத்தவும் தயாராக உள்ள ஒரு நபராக இருக்கிறார். இதுவே சீஷத்துவம்

இயேசு எப்படி மற்றவர்களை சீஷராக்கினார் என்பதை அறிய அவருடைய வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். அவர் தம்மைச் சுற்றியிருந்தவர்களுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்தார்; அவருடைய அப்போஸ்தலர்களும்—தேவனுடைய சித்தத்தைப் போதித்து, முன்மாதிரியாகக் காட்டி, தங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து மற்றவர்களுக்கு அர்ப்பணித்தார்கள். இந்த எடுத்துக்காட்டுகளின் பட்டியலே இதற்கு ஆதாரமாக இருக்கிறது; சீஷத்துவம் என்பது இயேசுவின் உண்மையுள்ள சீஷர்களால் தொடரப்பட வேண்டிய ஒரு முன்மாதிரி.

நாம் நற்செய்தி நூல்களைப் படிக்கும்போது, கிறிஸ்து தம்மைத் தேடி வந்த மற்றும் அவரைப் பின்பற்ற ஒப்புக்கொண்ட பன்னிரண்டு குறிப்பிட்ட மனிதர்களுக்கு எவ்வாறு தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்பதை நாம் காண்கிறோம் - அவர் விருப்பத்துடன் மூன்று வருட காலப்பகுதியில் அவர்களை சீஷராக்கினார். அவர்கள் கற்றுக்கொண்டார்கள், பார்த்தார்கள், கேள்விகளைக் கேட்டார்கள், அவருடைய போதனைகளைக் கேட்டார்கள், அவருடைய நடத்தையைப் பின்பற்றவும் ஆரம்பித்தார்கள். அவர் எங்கு சென்றாலும் அதுதான் அவர்களின் வகுப்பறையாக இருந்தது. அவர்கள் ஒரு வாழ்க்கைப் பாடத்திலிருந்து இன்னொரு பாடத்திற்குச் செல்லும்போது இயேசு அவர்களுக்குக் கற்பித்தார்; அவர்கள் எதையாவது புரிந்து கொள்ளாத போதெல்லாம், அவர் நிறுத்தி நிதானமாக விளக்கினார் (மாற்கு 4:34), தெளிவுபடுத்தினார் (மாற்கு 8:15-21); தேவைப்படும்போது அவர்களுடைய விசுவாசக் குறைபாட்டைக் கண்டித்தார் (மாற்கு 9:19-29).

இயேசு தம்முடைய ஊழியத்திற்குச் சென்றவுடன், "என்னைப் பின்பற்றுங்கள், என்னிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், என் சீஷராக இருங்கள்" என்ற அறிவுரைகளுடன் தம்மிடம் வந்த அனைவரையும் பின்பற்றும்படி அழைத்தார். அதேபோல, எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள், அதாவது மற்றவர்களை சீர்செய்வதற்கும், அவர்களுக்குக் கற்பிப்பதற்கும், விசுவாசத்தில் பலப்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட இருதயத்துடன் அவர்களை அணுக வேண்டும்.

இதன் அடுத்த பகுதியில், நமது நோக்கம் தேவைப்படும் மனிதர்களின் குறிப்பிட்ட இரண்டு குழுக்களைப் பற்றிப் பார்க்கிறோம்- போதகர்கள், கண்காணிகள், ஊழியர்கள் மற்றும் பொதுத் தலைவர்களை உள்ளடக்கிய சபையின் தலைமை, பின்னர் இரண்டாவது குழு-மந்தையாகிய ஒவ்வொரு விசுவாசி. அவர்களுக்கான இந்த சீஷத்துவ தேவையை நாம் எப்படி பூர்த்தி செய்ய முடியும்? என்பதை தொடர்ந்துப் பார்க்கலாம்.

## ஒவ்வொரு தலைவரும் ஒரு சீஷன்

பயனுள்ள ஊழியம் எதுவுமில்லாமல் நடந்து விடுமா? அப்படி நடக்காது! ஒரு தரிசனமும் (நீதிமொழிகள் 29:18) ஒரு குறிப்பிட்ட திட்டமும் இருக்க வேண்டும். குழப்பத்திற்கு எதிராக தேவன் நம்மை எச்சரிக்கிறார் (1 கொரிந்தியர் 14:33); தலைமைப் பதவியில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும், நல்ல நோக்கங்கள் கூட சுருசுருப்பான செயல்கள், புத்திசாலித்தனமான திட்டங்கள் மற்றும் பல முயற்சிகள் தேவனுடைய திட்டத்திலிருந்து திசைத்திருப்பி மோசமடையக்கூடும். நம்முடைய சபைகளுக்குள் சீஷராக வேண்டும் என்ற தேவனுடைய அழைப்பை நாம் நிறைவேற்ற வேண்டுமானால்,

சபையிலுள்ள ஒரு தலைவர் தேவனின் வார்த்தையை அறிந்திருக்க வேண்டும் மற்றும் கீழ்ப்படிதலிலும் வல்லமையிலும் வாழ உறுதிபூண்டிருக்க வேண்டும். யாரும் எப்போதும் பரிபூரணமாக இருக்க மாட்டார்கள், எனவே ஒரு விசுவாசி சீஷனின் வாழ்க்கையைப் புரிந்துகொண்டு மற்றவரை வழிநடத்த அந்த வழியில் நடக்க வேண்டும். எங்களுடைய புத்தகங்கள் நிரூபிக்கிறபடி, சீஷத்துவ ஊழியத்திற்கு ஒரு செயல்முறை மற்றும் ஒழுங்கு உள்ளது. பல கிறிஸ்தவர்கள், சபையில் உள்ள தலைவர்கள் கூட, தினசரி தியானத்தின் முக்கியத்துவம், கிறிஸ்துவில் நிலைத்திருப்பது, விசுவாசத்தின் அடிப்படை உண்மைகள் மற்றும் வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தைகளை பராமரிப்பதற்கான வேதாகம அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு தங்களை சீஷராக்கிக் கொள்ளவில்லை. எனவே, தலைவர்கள் முதலில் இந்தப் பயிற்சியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கிறோம்.

தலைவர்கள் ஏன் முதலில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்? ஏனென்றால், தாங்கள் புரிந்துகொள்ளாத மற்றும் தங்களைப் பயன்படுத்திக்கொள்ளாத ஒரு வாழ்க்கை முறைக்கு விசுவாசிகளை வழிநடத்த முடியாது. தலைவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில்

தேவனுடைய விருப்பத்தையும் வழிகளையும் அறிந்து பின்பற்றாத போது அவர்களின் வீடுகள் ஒழுங்காக இல்லாததால் உடலுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் (தீத்து 2:7; 1 தீமோத்தேயு 3:4-12).

நாங்கள் வழங்கும் பயிற்சிப்புத்தகங்களைப் படிக்கவும், இந்த ஆய்வின் பலனைத் தனிப்பட்ட முறையில் அனுபவிக்கவும் போதகர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பின்னர், விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும், உங்கள் குழுவை தலைமைத்தாங்கி சீஷத்துவத்தை தொடங்கலாம். FDM இல் நாங்கள் எங்கள் மூன்று பயிற்சிப்புத்தகங்களைப் படிக்க பரிந்துரைக்கிறோம்:

> கிறிஸ்தவ அடிப்படை சத்தியங்கள்: சீஷருக்கான உறுதியான அடித்தளம், திருமணம் ஒர் ஊழியத் தொடர், மற்றும் பிள்ளை வளர்ப்பு ஒர் ஊழியத் தொடர். மின்னணு பதிப்புகள் www.discipleshipworkbooks.com இல் அல்லது அச்சு பதிப்புகள் www.fdm.world இல் இலவசமாக கிடைக்கும்.

புத்தகத்தைப் படித்த மூப்பரொருவர் அல்லது தலைவரொருவர், கொள்கைகளை உண்மையாகப் பயன்படுத்தும்போது, மற்றவர்களை சீஷராக்க ஆயத்தமாக இருக்கிறார். கடந்த பத்து வருடங்களாக, உள்ளூரிலும், தேசிய அளவிலும், வெளிநாட்டிலும் சபைகளில் இந்த இயக்க சுழற்சியை நாங்கள் கண்டிருக்கிறோம். இது நம்பிக்கையையும், மாற்றத்தையும், ஈடுபட்டுள்ள விசுவாசிகளில் தேவனுடைய மாபெரும் வல்லமையும் மகிமைப்படுத்துகிறது.

இந்தப் பயிற்சிப்புத்தகங்களைக் கொண்டு மற்றவர்களை சீஷராக்கும்போது போது, அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் வீடுகளிலும் இந்த உபதேசங்களைப் பயன்படுத்துகிறார்களா என்பதை உறுதிப்படுத்த பின்தொடர்தல் முக்கியமானது. நிலைத்தன்மை இல்லாமல் பொறுப்பாக இருப்பது கடினம்; பல கிறிஸ்தவர்கள், சபையின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் கூட, தேவனுடைய அறிவுறுத்தல்களாகிய இந்தப் பகுதிகளை உண்மையில் புரிந்துகொள்வதில்லை. ஒரு போதகர் மிகவும் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் மற்றும் தேவனுடைய வார்த்தைகள் வெறும் பரிந்துரைகள் அல்ல என்பதை தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

> “இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே. ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப் போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும். அப்பொழுது உன் சந்ததி மணல் அத்தனையாகவும், உன் கர்ப்பப் பிறப்பு அதின் அணுக்கள் அத்தனையாகவும் இருக்கும்; அப்பொழுது அதின் பெயர் நம்மை விட்டு அற்றுப் போகாமலும் அழிக்கப்படாமலும் இருக்கும்.” (ஏசாயா 48:17–19)

தேவன் அவருடைய ஒவ்வொரு பிள்ளைகளிலும், பிள்ளைகளாலும் மகிமைப்படுத்தப்பட விரும்புகிறார். பற்பல காரியங்களில் சுறுசுறுப்பாக இருப்பது, நம்மை தேவனுக்காக சிறந்த ஊழியக்காரராக

மாற்றுவதுமில்லை, தேவனுடைய சித்தம் செய்வது மட்டுமே சிறந்த ஊழியக்காரர்களாக மாற்றும்.
(1 சாமுவேல் 15: 22-23) யாரை தலைமைத்துவ பண்புடையவர்களாக கருதலாம் என்பது பற்றி போதகர்களுக்கு தேவன் அறிவுறுத்துகிறார்.

> ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1 தீமோத்தேயு 3:5).
>
> மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும்; குற்றஞ்சாட்டப் படாதவர்கள் ஆனால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம் (1 தீமோத்தேயு 3:10).
>
> அம்ப்ளிபைடு வேதாகமம் கூறுகிறது,
>
> முதலில் நீங்கள் அவர்களைச் சோதனை செய்யுங்கள் அவர்களில் எதுவும் குற்றம் இல்லாவிட்டால் பிறகு அவர்கள் விசேஷ உதவியாளர்களாக சேவைசெய்ய முடியும். (1 தீமோத்தேயு 3:10).

மேலே உள்ள வசனங்களில் ஒன்று "முன்னதாகச் சோதிக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறது, அதாவது குறிப்பிட்ட பகுதிகளில் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிற உண்மையுள்ள கீழ்ப்படிதலின் காலம். ஒரு போதகர் தன்னுடைய தலைமைத்துவத்தை சீஷராக்குவதற்கு அதிகாரத்தையும், தேவனால் கட்டளையும் பெற்றிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய மந்தை பக்திவிருத்தியடைய செய்யும்படிக்கு கர்த்தர் தந்த தனித்துவமான வரங்களால் முதலில் சீஷராக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களுக்கு கீழ்ப்படிதலுக்கான வெளிப் படுத்துவதற்கான காலம் கொடுக்கப்பட வேண்டும். இந்த அறிவுறுத்தல்களை அவர்களின் வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டிய அவசியமான முன்னுரிமைகளாகப் பார்க்க போதகர் தனது தலைமைத்துவத்தில் அறிவுறுத்துவது மிகவும் முக்கியமானது.

> “உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு” (1 தீமோத்தேயு 4:12).

"உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும். அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும். சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1 பேதுரு 5:1–4).

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோகும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்ளுவது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்". (யோவான் 15:4–8)

போதகர்கள் இந்தப் பயிற்சி புத்தங்களைத் தங்கள் தலைமைத்துவத்தில் அறிமுகப்படுத்தும்போது சில எதிர்ப்புகளைச் சந்திப்பது வழக்கம். சிலர் ஆச்சரியமாக உணரலாம், சிலர் அச்சுறுத்தப்படலாம், மற்றவர்கள் அதை தேவையற்றதாக கருதலாம் அல்லது தங்களுக்கு உதவி தேவையில்லை என்று நினைக்கலாம். 1

தீமோத்தேயு 3:1-12 மற்றும் தீத்து 2:7 இல் உள்ள தேவனின் அறிவுரைகளை நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்று சந்தேகிப்பவர்களுக்கு உறுதியளியுங்கள். தலைவர்களாக, ஒருவருக்கு அறிவுரை வழங்குவதற்கும், சீஷர்களாக்கும் ஒவ்வொரு வாய்ப்புக்கும் அவர் தேவனால் பொறுப்பாளியாக இருக்கிறார்கள். ஒரு போதகர் அவருடைய ஒப்புதலின் கீழ் பணியாற்றுவதால், அவர்களின் வார்த்தைகள் மற்றும் செயல்களுக்குப் பொறுப்பேற்பது தெளிவாக இருக்கிறது.

புதியவர்கள் சபையின் தலைமைத்துவத்தில் ஈடுபட விரும்பினால், போதகர் அல்லது நியமிக்கப்பட்ட மனிதன் அவர்களை இந்த பயிற்சி புத்தங்கள் மூலம் சீஷனாக மாற்றி, அவர்களை அவதானிக்க ஒரு காலத்தை அனுமதிக்க வேண்டும். அவர்கள் கோட்பாடுகளை உண்மையாக அப்பியாசப்படுத்தி வெளிப்படுத்துதின் மூலம் மற்றும் பதவி வழங்கப்படுவதற்கு முன்பு அவர்கள் கற்றுக்கொண்ட சத்திங்களைப் புரிந்துகொண்டதை நிரூபிக்க வேண்டும். அவர்கள் திருமணமாகாவிட்டாலும் அல்லது குழந்தைகள் இல்லாவிட்டாலும், மூன்று பயிற்சிப்புத்தகளையும் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவைகள் மந்தையானது போராடும் பகுதிகளில் ஊழியம் செய்ய அல்லது சீஷராக அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

பல போதகர்கள் இன்னும் சீஷர்களாக மாறாமல் இருக்கிறார்கள், மேலும் ஒரு முதிர்ந்த விசுவாசியானவன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இயேசு தம் சீஷர்களிடம் விரிவுப் படுத்திய மாதிரியைக் காண்பிப்பதன் மூலம் அவர்களுக்குள் உள்ள தாக்கத்தை போதகர்கள் அனுபவிக்கவில்லை. ஒருவருக்கு புத்தகம் கொடுத்துவிட்டு, அவர்கள் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதை கேட்பதற்காக எதேச்சையாக அவர்களைச் சந்திப்பதுப்போன்றதல்ல இது. அல்லது அவர்கள் ஒரு வகுப்பிற்கு வந்து/அல்லது அவர்கள் தாங்களாகவே ஒரு வீடியோ தொடருக்கு வந்து செல்வதுமல்ல. சீஷத்துவம் என்பது வேத சத்தியங்களைத் தவறாமல் வாசிப்பதும் தியானிப்பதும், பிரச்சனைக்குரிய பகுதிகளைக் கண்டறிந்து இலக்குகளை நிர்ணயிப்பதும், உக்கிராணத்துவத்திற்கான அடிப்படையை நிறுவுதல் ஆகியவை அடங்கும். இந்த வகையான ஐக்கியம், கற்பித்தல் மற்றும் பின்தொடர்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காகவே எங்கள் பயிற்சிப்புத்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விஷயத்தை அறிமுகப்படுத்தி, அதை உண்மையாகப் பயன்படுத்துவதன் மூலம், ஒரு போதகர் இயேசுவின் முன்மாதிரியைப்

பின்பற்றி, சீஷர்களுக்குக் கற்பித்தும் பயிற்சியையும் அளிக்கிறார். இப்படி செய்யும் போதகர்கள் தங்கள் மந்தையில் அற்புதமான ஆவிக்குரிய வளர்ச்சியைக் கண்டு இருக்கிறார்கள் என்பதை நாங்கள் எங்கள் அனுபவத்தின் மூலம் அறிந்திருக்கிறோம். ஏற்கனவே அலுவல் நிறைந்த வாழ்க்கை அனுமதிப்பதை விட இந்த செயல்முறை அதிக நேரம் எடுக்கும் என்று பலர் உணரக்கூடுமென்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், ஆனால் இந்த வாழ்க்கைமுறையிலும், இந்த நடைமுறையிலும் இருந்து வரும் வேதாகம சத்தியங்கள் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி விடும் என்பதை நாம் போதுமான அளவு வலியுறுத்த முடியாது! விசுவாசிகள் தேவனுடைய வழிகளையும் சித்தத்தையும் அறிந்து பின்பற்ற உதவுவதற்காக நமது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் இந்த சீர்திருத்த முறையைப் பயன்படுத்தினார்கள் என்றால், இதற்கு நேரத்தை ஒதுக்காமல் இருப்பதை நாம் எப்படி நியாயப்படுத்த முடியும்? நினைவில் கொள்ளுங்கள், சீஷரை உருவாக்குவது என்பது ஒவ்வொரு விசுவாசிக்குமானதும் தேவனால் கட்டளையிடப்பட்டதுமாகும். மேலும் தலைவர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

> நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவான் 13:15–17).

### ஒவ்வொரு விசுவாசியும் ஒரு சீஷர்

“ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி” என்ற இயேசுவின் பிரதான கட்டளை” (மத்தேயு 28:19–20) அனைத்து விசுவாசிகளுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இருப்பினும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சீஷராக இருப்பதோடு தொடர்புபடுத்திக்கொள்ளவதில்லை, ஏனெனில் பெரும்பாலானவர்கள் அதை ஒரு உயரடுக்கு குழுவாகக் கருதுகின்றனர், அதற்கு அவர்கள் தகுதி பெறவில்லை என்று எண்ணுகின்றனர். சீஷர் என்ற பிரிவினர் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைகளைக் கற்றுக் கொள்ளும் ஒரு பிரிவு என்று பலர் நம்புகிறார்கள், ஆனால், “சீஷராக்குங்கள்” என்று இயேசு சொன்னதன் பொருள் இதுவல்ல. அவர் நம்முடைய முன்மாதிரி, அவருடைய அணுகுமுறை மிகவும் தனிப்பட்டது மற்றும் குறிப்பிட்ட நேரத்தை எடுத்தது. கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் ஒருவரையொருவர் கற்பித்தல், ஊக்குவித்தல் மற்றும் ஒருவருக்கொருவர் பொறுப்பாக இருப்பது ஆகியவற்றின் மூலம் ஒருவரோடு ஒருவர் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணினார். இணைந்து ஜெபிப்பதைப் பற்றியும், நம்முடைய பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுவதைப் பற்றியும் வேதம் பேசுகிறது. எத்தனை விசுவாசிகள் இந்த வாழ்க்கை முறையில் வாழ்கிறார்கள், அல்லது இது அவர்களுக்கான தேவனுடைய திட்டம் என்று அறிந்திருக்கிறீர்களா? கிறிஸ்து அவர்களை ஒரு சீஷனாக இருக்க அழைத்துள்ளார் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் "சீஷர்களாக்க" அழைக்கப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சுவிசேஷம் கூறுவதிலும் மற்றும் தேவனுடைய பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவதிலும் சபையானது ஆற்றல் வாய்ந்தாக இருக்க வேண்டும்.

தீத்து 2:1-10ல், பவுல் தீத்துவுக்கு சபைக்குள் சீஷராக்குவதற்கான ஆலோசனையை வழங்குகிறார்; பழைய விசுவாசிகள் புதிய விசுவாசிளுக்கு கற்பிக்கவும், புத்திசொல்லவும் வேண்டும், அவர்களின் சொந்த

நடத்தையானது எப்போதும் பரிசுத்தம், உறுதியான கோட்பாடு மற்றும் சுயக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் நற்கிரியைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். மேலும் எபிரேயர் 5:12-14 இல், விசுவாசிகள் குழந்தைகளாக இருக்காமல், முதிர்ச்சியடைய வேண்டும், அப்போது தான் தேவனுடைய வார்த்தையாகிய பலமான ஆகாரத்தை உண்ண முடியும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்த வகையான ஆவிக்குரிய முன்னேற்றம் சீஷத்துவத்தின் அடையாளம். மற்றவர்களின் வாழ்க்கையில் ஈடுபாடுக்கொள்ளவும், நேரத்தை ஒதுக்கவும், அவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை அறிய அவர்களுக்கு உதவவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பு ஒரு போதகருக்கும், அவருடைய ஊழியர்களுக்கு மட்டும் அல்ல என்பதையும் நாம் காண்கிறோம்.

சீஷத்துவத்திற்கான இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டிருப்பதே போதகரும் அவருடைய ஊழியர்களும் மந்தைக்குக் கடமைபட்டிருப்பது அவர்களுடைய பொருப்பாகும். ஒவ்வொரு விசுவாசியும் தங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உறுதியான சீஷராக மாறுவதற்கான வாய்ப்பில் உற்சாகமாக இருக்க வேண்டும். தலைமை இதை எடுத்துக்காட்ட வேண்டும், ஆனால் போதகர் தெளிவுபடுத்திய தொலைநோக்கு மற்றும் உத்திகள் இல்லாமல், அது நடக்காது. நாங்கள் வழங்கும் இந்த பயிற்சிப்புத்தகங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதற்கான உபகரணங்கள், அவர்களின் வாழ்க்கையில் தேவன் கொடுத்துள்ள மூன்று முன்னுரிமைகளுக்குச் செவிசாய்க்கும் மற்றும் பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்தும் தேவனின் வார்த்தைகளாலும், சத்தியங்களாலும் நிரப்பப்பட்டுள்ளன. தேவன் தம் வார்த்தையின் மூலம் ஒழுக்கமான வாழ்க்கையின் அவசியத்தையும் மதிப்பையும் பற்றி பேசுகிறார். பயிற்சி புத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளையும் படிகளையும் நீங்கள் பின்பற்றினால், புதிய வடிவங்கள் உருவாகும், மேலும் வாழ்க்கை மாறும். பின்தொடருவது செயல்முறையின் அல்லது உத்தியின் இன்றியமையாத பகுதியாகும், மேலும் இது வேதத்தை அடிப்படையாகக் கொண்டது; சீஷத்துவம் முன்னேறுவதைப் பின்தொடர்தல் உறுதி செய்கிறது.

பல சபைகள் தங்கள் உடன்வேலையாட்களின் ஒவ்வொரு வாழ்க்கை நிலையையும் குறிவைத்து குறிப்பிட்ட திட்டங்கள் அல்லது ஊழியகங்களைக் கொண்டுள்ளன. இது சிறந்தது தான், ஆனால் அவற்றில் என்ன கற்பிக்கப்படுகிறது என்பது உண்மையில் முக்கியமானது. மிகவும் பொதுவான சில ஊழியங்கள் மற்றும் இந்த பகுதிகளில் உங்கள் சீஷத்துவ செயல்முறைக்கு FDM இன் பயிற்சிப்புத்தகங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பார்ப்போம். உங்கள் மந்தை இருக்கும் இடத்தை அடைவதே குறிக்கோள்.

### திருமணம் மற்றும் பிள்ளைவளர்ப்பு வகுப்புகள்

இந்தப் பகுதியில் சீஷத்துவத்தைத் தொடங்குவதற்கான ஒரு சிறந்த வழி, ஒவ்வொரு புத்தகத்திலும் பொருந்தும் வகையில், காலாண்டு வகுப்புகளை வழங்குவதாகும். இதன் மூலம், உடனடியாக உதவி தேவைப்படும் தம்பதிகள் சிக்கல்கள் தீவிரமடைவதற்கு முன்பு புதிய வகுப்பில் சேரலாம். தலைவர் என்பவர் ஏற்கனவே இந்த புத்தகங்களை நன்கு அறிந்தவராகவும், தங்கள் சொந்த வாழ்க்கையில் கொள்கைகளை செயல்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். சபையிலோ அல்லது வீடுகளிலோ இதற்கான இடத்தை தங்கள் விருப்படி அமைத்துக்கொள்ளலாம். இந்த வகுப்புகள் திருமணத்தின் அனைத்து வயது மற்றும் நிலைகளுக்கும், திருமணத்திற்கு முந்தைய ஜோடிகளுக்கும் சிறந்தது.

தம்பதிகள் வகுப்புகளில் ஈடுபாடு கொள்ளும்போது, பட்டதாரிகளை திருமண வழிகாட்டிகளாகவும் மற்ற ஜோடிகளுக்கு சீஷர்களாகவும் எழுப்ப வேண்டும் என்பது தலைவர்களின் ஜெபமாக இருக்க வேண்டும். சில நேரங்களில் ஆலோசனை தருவதும், தனிப்பட்ட விதத்தில் ஒருவருக்கு ஒருவர் சீஷத்துவத்தை கற்பிப்பதும் போன்ற அதிக கவனம் செலுத்தும் சில சூழ்நிலைகள் வரலாம் என்று எதிர்பார்க்கலாம். இப்போது, உங்கள் மந்தைக்கு ஊழியம் செய்ய இது ஒரு பயனுள்ள மற்றும் விரிவான வழியாகும் என்ற பார்வையை நீங்கள் பெற வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். விசுவாசிகள் அதிக ஈடுபாடு கொள்ளும்போது, கிறிஸ்துவின் சரீரத்தை கட்டியெழுப்புவதற்காக பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்த வரங்களை அவர்கள் கண்டுபிடிப்பார்கள். தேவனுடைய பிள்ளைகளாக அவருடைய விருப்பத்தை மக்கள் புரிந்துகொள்வதால், ஊழியம் பெருகும், அவருடைய சீஷர்களாகும் அழைப்புக்கு பதிலளிப்பவர்களிடையே மகிழ்ச்சியையும் வெற்றிகரமான வாழ்க்கையையும் நீங்கள் காண்பீர்கள்.

பின்தொடர்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக, குறிப்பிட்ட நபர்கள் அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதால் ஏற்படும் பொதுவான பிரச்சனையை உணருங்கள். மற்றவர்களை சீஷராக்கும் பழக்கமில்லாத பணியை செய்யும் புதிய மனிதர்கள் மீது தேவனுடைய ஆவியின் அசைவாடுதலை தேடுங்கள். இந்தத் திருமணம் மற்றும் பிள்ளை வளர்ப்பு ஊழியத்தை நீங்கள் செயல்படுத்தியவுடன்,

தம்பதிகளுக்கு கடந்தகால வலிகள் பல பிற்போக்குத்தனமாக இருந்தன என்பது தெளிவாகிறது; மக்கள் முழு நெருக்கடி நிலையில் வந்த பிறகு தலையிடுவது அல்ல, அந்நிலைக்கு வருவதற்கு முன்பே தடுப்பதே குறிக்கோள். ஆலோசனை அறையில் நீண்டகால எதிர்மறைகளையும், அணுகுமுறைகளின் சிக்கலைகளையும் தீர்ப்பதை விட சீரான திருமண சீஷத்துவத்தின் தேவை உண்மையானது என்பதை இந்த புத்தகங்களைப் பயன்படுத்தும்போது உங்களுக்கு உணர்த்தும்.

## ஆலோசனை

எங்கள் வேதாகம பயிற்சிப்புத்தகங்களை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு ஆலோசனை ஒரு சிறந்த வாய்ப்பாகும். உதாரணமாக, ஒரு தம்பதியினர் உள்ளே வருகிறார்கள், மனைவி மிகவும் வெறுப்பாக உணர்கிறாள் அல்லது கணவன் ஒரு வேலைக்கு அடிமையானவன் என்பது வெளிப்படையாக தெரிகிறது. ஒரு நபர் ஆலோசகரிடம் வரும்போது, அவர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில தனிப்பட்ட வேலைகளைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள். சீஷத்துவத்தை மையமாகக் கொண்ட ஆலோசனை செயல்முறைகள் ஒரு பிரச்சனையின் ஆவிக்குரிய மூல காரணத்தையும் வெளிப்படுத்தும்; அது அவர்கள் உருவாக்கிய அறியாமை மற்றும் பாவப் பழக்கங்களை அம்பலப்படுத்துகிறது. அறிகுறிகளைத் துரத்துவது அல்லது முட்டாள்தனமான காழ்ப்புணர்ச்சியைக் கேட்டு நேரத்தை வீணடிப்பது யாருக்கும் உதவாது. பெரும்பாலான திருமண பிரச்சனைகளுக்கு மூல காரணம், தேவனுடைய சித்தத்தையும், திருமணமத்திற்கான வழிகளை அறியாமல் இருப்பதும் மற்றும் சுயநலத்தின் விளைவாகும்.

சீஷத்துவ ஆலோசகரின் பங்கு:

- இரட்சிப்பு, குணப்படுத்துதல் மற்றும் அறிவுறுத்தலுக்காக அவர்களை இயேசுவையும் அவரது வார்த்தையையும் சுட்டிக்காட்டுங்கள்.
- ஒரு மனிதரின் வாழ்க்கையில் ஏன், எப்படி பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள உதவுங்கள்.
- நீதியின்படி நடக்க அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள் மற்றும் தேவன் அவர்களுக்குக் கொடுத்துள்ள காரியங்களை எல்லாம் அவருடைய வார்த்தையின்படியே கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுங்கள்.
- தேவைப்படும் இடத்தில் மன்னிப்பையும் ஒப்புரவாகுதலையும் நாடுங்கள்.
- அன்பு, ஊக்கம், அறிவுரை, கண்டித்தல் ஆகியவற்றை வழங்குங்கள்.

எங்கள் பயிற்சிப்புத்தகங்கள் ஆலோசகர் மற்றும் ஆலோசனைப் பெறுகிறவர்கள் ஆகிய இருவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். அவர்கள் கற்றுக்கொள்வதைப் புரிந்துகொள்ளவும், பயன்படுத்தவும் உதவும் தனிப்பட்ட பயன்பாடுகள் மற்றும் நியமிப்புகளுடன் தேவனுடைய சத்தியத்தைப் போதிக்கும் விதத்தில் அவைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. உண்மையாகவே மாற விரும்பும் மனிதர்கள் ஒவ்வொரு வாரமும் வேலையைச் செய்ய நேரம் ஒதுக்குவார்கள். கீழ்ப்படிதலால் நாம் செய்ய வேண்டியதை தேவன் அற்புதத்தால் செய்யமாட்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் வீட்டுப்பாடம் செய்யவில்லை என்றால், நீங்கள் அவர்களுக்கு வேறு என்ன செய்ய முடியும்? தேவனுடைய வார்த்தையும் அவருடைய சித்தத்தைப் பின்பற்றுவதற்கான அவர்களின் விருப்பமும் மாற்றத்தைக் கொண்டுவருகிறது.

தங்கள் வீட்டுப் பாடங்களைச் செய்ய விரும்பாத ஒருவர், மற்றவர்களை குறை கூறி, நியாயந்தீர்ப்பதன் மூலம் அல்லது தேவன் தெளிவாகச் கூறுவதை அவர்களால் ஏன் செய்ய முடியாது என்பதைப் பற்றி சாக்குப்போக்கு கூறி உங்கள் நேரத்தைச் செலவழிக்க விரும்புபவர்கள், தேவனை மறைமுகமாக கேலி செய்கிறார்கள். தேவன் பொய்யர் அல்ல; அவருடைய வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் மற்றும் கீழ்ப்படிவதற்கான விருப்பம் அனைத்தும் ஒருவருக்கு அளிக்கப்பட்டு தங்கள் வாழ்க்கையை ஒழுங்கமைக்க வேண்டும். அந்த சத்தியத்தின் மீது நீங்கள் நிற்க வேண்டும்.

> தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். (நீதிமொழிகள் 29:18)
>
> அம்ப்ளிபைடு வேதாகமம் கூறுகிறது,
>
> ஒரு நாடு தேவனால் வழி நடத்தப்பாவிட்டால் அந்நாட்டில் சமாதானம் இருக்காது. ஆனால் தேவனுடைய சட்டங்களுக்கு கீழ்ப்படியும் நாடு மகிழ்ச்சி அடையும். (நீதிமொழிகள் 29:18)

மற்றவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கும் சீஷர்களுக்கு உதவுவதற்கும் மற்றவர்களை சீஷர்களாக மாற்றுவதற்கும் கர்த்தருடைய வழிகாட்டுதலுக்காக ஜெபியுங்கள், தேடுங்கள். ஆலோசகர்கள் சீஷத்துவ உபகரணங்கள் மற்றும் பொருத்தமான பயிற்சிப்புத்தகங்களுடன் தகுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், எடுத்துக்காட்டாக, வெறுப்பு, கோபம் அல்லது தகவல் தொடர்பு திறன்களை விட பரந்த பகுதியை இது உள்ளடக்கியிருக்கிறது. பெரும்பாலும், குறிப்பிட்ட பிரச்சனைகள் திருமணம், குழந்தை வளர்ப்பு அல்லது மன்னிப்பு உட்பட வாழ்க்கையின் பிற பகுதிகளில் அறியாமையின் அறிகுறிகளாகும். ஒரு சிக்கலைக் கையாள்வது (மேலும்) செயலிழந்த ஆன்மீக வாழ்க்கையின் மூல காரணங்களைத் தீர்க்காது. பெரும்பாலான பிரச்சனைகள் அறியாமை, எதிர்க்கும் தன்மை அல்லது ஆவிக்குரிய காரியங்களில் உருவாகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். கற்றுக் கொள்ளும் மற்றும் அவரைப் பின்பற்ற விரும்பும் எவருக்கும் தேவனிடம் பதில் இருக்கிறது.

சரியான ஆலோசனை என்பது:

1. பிரச்சனையின் தோற்றத்தைப் பற்றிய புரிதலைக் கொண்டு வாருங்கள்: கீழ்ப்படியாமை, தேவனுடைய வார்த்தையின் சில பகுதிகளை அறியாமை (அல்லது மன்னிக்காதது) ஆகியவற்றால் வரும் பாவம்.
2. பாவ மனப்பான்மை, நடத்தைகள், தவறான மனநிலை, கோபம், தெய்வபக்தியற்ற பழக்கங்கள், கோட்டைகள், மோசமான தொடர்பு மற்றும் பல பிரச்சனையின் விளைவான பலனைக் கண்டறியுங்கள்.
3. நல்ல வேத அடிப்படையிலான பயிற்சிப்புத்தகங்களைப் பயன்படுத்துவது, தேவனின் கொள்கைகளை வரையறுப்பதற்கும், பிரச்சனையின் (களின்) மூலத்தைக் குறிப்பிடுவதற்கும், சரியான சிந்தனை மற்றும் நடத்தை பற்றிய அறிவுறுத்தலை வழங்குவதற்கும் உங்களுக்கு உதவும். (நிச்சயமாக, இதில் திருமணம் மற்றும் பெற்றோருக்குரிய பிரச்சினைகளும் அடங்கும்.)

உங்கள் ஆலோசனையில் உங்களுக்கு உதவ எங்கள் பயிற்சி புத்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளது; இதை குறித்து மேலும் அறிய எங்கள் இரு இணையதளங்களையும் நீங்கள் பார்வையிடலாம்: www.fdm.world மற்றும் www.discipleshipworkbooks.com.

### குடும்ப ஊழியங்கள்

ஒரு குழந்தையை பிரதிஷ்டையில், நீங்கள் ஒரு குழந்தை மற்றும் குடும்பத்தை ஆசீர்வதிக்குமாறு தேவனிடம் கேட்கிறீர்கள், ஆனால் இதுவும் குழந்தையை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் நோக்கத்தில் பெற்றோருடைய வெளிப்படையான ஒரு அறிக்கையாகும் (நீதிமொழிகள் 22:6). கர்த்தர் தமது வார்த்தையில் அறிவுறுத்தியபடி ஒரு குழந்தையை வளர்ப்பது இதன் முன்னோடியாகும். சபையாகிய நாம், இந்த பொது பிரதிஷ்டையை முக்கியமானதாக கருத வேண்டும், அப்படிச் செய்தால், ஒரு குழந்தையை எப்படி வளர்ப்பது என்பது பற்றிய வேதாகம அறிவுறுத்தல்களை வழங்கும் ஒரு திட்டம் எங்களிடம் இருக்கிறது. எங்கள் பயிற்சி புத்தகங்களில் இருந்து நீங்கள் கற்றுக்கொள்வது போல, ஞாயிறு பள்ளி, சபை அல்லது வீட்டில் ஆவிக்குரிய ஆராதனைகளை நடத்துவதைக் காட்டிலும் இதில் அதிகமாக அடங்கியிருக்கிறது. பிள்ளைகளை வளர்ப்பது சவாலானது, பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் இயேசுவில் ஒரு தம்பதியராக தங்கி அவருடைய விருப்பத்தை நிறைவேற்றவில்லை என்றால், அவர்கள் எப்படி வெற்றிபெற முடியும்?

நாம் முன்பு குறிப்பிட்டது போல, மக்கள் தங்கள் தொழில்களுக்குப் பயிற்சியளிக்கிறார்கள், சிலர் பல ஆண்டுகளாகப் பயிற்சி செய்கிறார்கள், மேலும் ஒரு வேலைக்காரனுக்கு அதிகப் பொறுப்பை வழங்குவதற்கு முன் அதற்கு நேரமும் அனுபவமும் தேவைப்படுகிறது. தேவனுடைய வார்த்தை போதனைகள் நிறைந்ததாக இருந்தாலும், பெரும்பாலான பெற்றோருக்கு பெற்றோருக்குரிய பயிற்சி இல்லை. ஒரு குழந்தையை பிரதிஷ்டை செய்வதற்கு முன், சபைத் தலைவர்கள் ஒரு சிறிய குழுவை அமைத்து பெற்றோருக்குரிய வகுப்பை நடத்த வேண்டும் அல்லது பிள்ளை வளர்ப்பு பயிற்சிப்புத்தகத்தின் மூலம் அவர்களை அழைத்துச் செல்ல ஒரு சீஷரை ஏற்படுத்த வேண்டும். வீட்டில் அன்பான சூழ்நிலையை எவ்வாறு உருவாக்குவது, அவர்களின் சொந்த குழந்தைகளை சீஷராக்குவது, ஜெப நேரம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் சரியான ஒழுங்குமுறைத் திட்டத்தை வைத்திருப்பது எப்படி என்பதை பெற்றோருக்குக் கற்பிப்பது குழந்தையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இன்றைய குழந்தைகளில் பெரும்பாலானோர் வீட்டை விட்டு வெளியேறும்போது, தேவ நம்பிக்கையை விட்டு விலகிச் செல்வதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

இந்த பகுதிகளில் சீஷத்துவத்தின் ஆசீர்வாதங்களை மக்கள் அனுபவிப்பதால், மற்றவர்களை சீஷராக்குவதற்கான அடித்தள புரிதலையும் பார்வையையும் இது அமைக்கிறது. இந்த குழந்தை

தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் விளக்கும்போது, அவர்/அவள் உண்மையில் அவர்களின் பராமரிப்பில் வைக்கப்பட்ட ஒரு பரிசு, அவருடைய அறிவுறுத்தலின்படி வளர்க்கப்பட வேண்டும், அவர்கள் சீஷராக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் காண்பார்கள்.

மேலும், பெற்றோர்கள் தனிப்பட்ட பரிசுத்தத்திற்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் பெற்றோருக்குரிய கோட்பாடுகளைப் பயன்படுத்துவது பயனுள்ளதாக இருக்காது. சீஷத்துவம் என்பது வீடியோ தொடர்களைப் பார்ப்பதினாலும் மற்றும் பயிற்சிப்புத்தகங்களை தாங்களாகவே படிப்பதினாலும் கிடைக்கப்பெறும் ஒன்றல்ல, ஆனால் ஒவ்வொரு பாடத்திற்குப் பிறகும் யாராவது அவர்களைப் பின்தொடர வேண்டும். மக்களுக்கு உதவி கிடைக்காதபோது, அவர்கள் தங்கள் நேரத்தைக் கடைப்பிடிப்பதில் அடிக்கடி தவறிழைக்கிறார்கள், மேலும் வேதம் அல்லாத ஆதாரங்களிலிருந்து வரும் தகவல்களால் திசைதிருப்பப்படுகிறார்கள். மேலும், பின்பற்ற வேண்டிய படிகள் பல இருக்கிறது மற்றும் நிலைத்தன்மை பெரும்பாலும் கடினமாக இருக்கும்.

### வாலிபர் ஊழியங்கள் மற்றும் வழிகாட்டுதல்

சபையிலுள்ள வாலிபர் பிரிவின் போதகர் பெரும்பாலும் அவர் மேய்க்கும் குழந்தைகளின் குடும்பங்களைப் பற்றிய முக்கியமான நுண்ணறிவைக் கொண்டிருப்பார். அவர், குடும்ப போதகர் (பொருந்தினால்) மற்றும் மூத்த போதகர் (அமெரிக்காவில் வாலிபருக்கு ஒரு போதகர், குடும்பங்களுக்கு ஒரு போதகர் மற்றும் சபைக்கென்று ஒரு போதகருண்டு) ஆகியோருக்கு இடையே பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களை அடையாளம் காண உதவும். பெற்றோருக்குரிய பிரச்சினைகளுடன் போராடும் குடும்பங்களைச் சென்றடைவதற்கான முயற்சிகளுக்கு இது உதவுகிறது. பவுல் எபேசி பட்டணத்து மூப்பர்களிடம் இவ்வாறு கூறினார்,

> "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்." (அப்போஸ்தலர் 20:28).

இதனால்தான் வாலிபர் போதகர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு தனிப்பட்ட சீஷத்துவம் மற்றும் குழந்தைகளை வளர்ப்பதற்கான தேவனுடைய திட்டம் ஆகிய இரண்டிலும் பயிற்சி அளிப்பது மிகவும் முக்கியமானது. வாலிபர் போதகர்களுக்கு, பிரச்சினைகளைக் கண்டறிந்து, வேதத்தின்படி தீர்வுகளை வழங்குவதன் மூலம் திறம்பட ஊழியம் செய்ய இந்தப் பயிற்சி தேவை.

ஒரு குழந்தையைக் கையாள்வது குறித்த முன்னோக்கு அல்லது ஆலோசனைக்காக பெற்றோர்கள் இளைஞர் போதகரை அழைப்பதும், அல்லது சந்திப்பதும் பொதுவானது. ஒரு குழந்தை கர்த்தருடனும் அவர்களது பெற்றோருடனும் இணைந்திருக்க உதவும் வாய்ப்பை ஒரு வாலிபர் போதகர் அடிக்கடி பெறுகிறார். சபையை மட்டுமல்ல, தேவனையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வாலிபர் போதகருக்கு மூத்த போதகர் பயிற்சி அளிக்க வேண்டும். உதவியை நாடும் இளைஞர்கள் மற்றும் பெற்றோருக்கு அவர்கள் சரியான ஆலோசனைகளை வழங்குகிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சீஷத்துவ செயல்முறையானது ஒரு சபைக்குள், தலைமையிலும் மந்தையிலும் ஆவிக்குரிய இணைப்பு மற்றும் ஐக்கியத்தின் வலையமைப்பை எவ்வாறு உருவாக்குகிறது என்பதை நீங்கள் பார்க்க முடியுமா? தேவன் தம்முடைய பிள்ளைகளை இப்படித்தான் வளர்க்க விரும்புகிறார்.

சமூகத்தில் பல ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் உள்ளன, அதே போல் கிறிஸ்தவர் அல்லாத பெற்றோரைக் கொண்ட பல இளைஞர்களும் உள்ளனர். இந்த குழந்தைகளுக்கு ஊழியம் செய்வதே இளைஞர் வழிகாட்டுதல் ஊழியத்தின் அடிப்படையாகவும், முதன்மையான கவனம் ஆகும், இது ஒரு குழந்தையுடன் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்து கொள்ள ஒரு சிறந்த வழியாகும், தந்தை அல்லது தாயுடன் இல்லாத உறவில் அல்லது வீட்டில் கிறிஸ்தவ செல்வாக்கு இருப்பதில்லை (யாக்கோபு 1:27). இந்த குழந்தைகளை சென்றடைவதற்கு ஆவிக்குரிய வரங்கள் மற்றும் அர்ப்பணிப்பு உள்ள இருதயத்துடன் ஒரு வாலிபர் வழிகாட்டி ஒருங்கிணைப்பாளரை உருவாக்குவதற்காக கர்த்தருடைய வழிகாட்டுதலைப் பெற ஜெபம் செய்யுங்கள். இந்த ஊழியத்தை எவ்வாறு நிறுவுவது என்பது குறித்த வழிகாட்டிக்கு எங்கள் இணையதள முகவரி www.FDM.world ஐப் பார்வையிடவும்.

### ஆண்கள் மற்றும் பெண்கள் ஊழியம்

> "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கம் உள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியம்

> உள்ளவர்களுமாய் இருக்கும்படி புத்திசொல்லு. முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கு ஏற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாத- வர்களுமாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய் இருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத் தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாய் இருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு. அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்திசொல்லி, நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத் தக்கதாக, உபதேசத்திலே விகற்பம் இல்லாதவனும், நல்லொழுக்கம் உள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாய் இருப்பாயாக." (தீத்து 2:1–8)

வேதாகமத்தின் இந்தப் பகுதி, ஒரு சபையில் ஆண்கள் அல்லது பெண்களின் ஊழியத்திற்கு ஒரு சிறந்த தரிசனத்தை வழங்குகிறது. முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் இளைய மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் பெலவீனமான விசுவாசிகளுக்கு நீதியில் நடக்கவும், தேவன் தம்முடைய வார்த்தையில் காணப்படும் அறிவுறுத்தல்களின்படி அவர்களுக்குக் கொடுத்துள்ள விஷயங்களைச் செய்யவும் கற்பிக்கும் சித்திரம் இது. ஒரு மனைவி மற்றும் பெற்றோராக ஒரு குடும்பத்தை எவ்வாறு நடத்துவது என்பதை அவர்களுக்குக் கற்பிப்பதே முன்னுரிமை என்பது மிகவும் தெளிவாக உள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்கள் ஊழியம் உட்பட சபையில் உள்ள அனைத்து ஊழியங்களிலும் என்ன கற்பிக்கப்படுகிறதோ அதற்கு முன்னுரிமைகளை அமைப்பது மூத்த போதகரின் பொறுப்பு!

## ஆரம்பித்தல்

*ஜெபம்.* நாம் நமது மாம்சத்திற்கு எதிராக மட்டுமல்ல, ஆவிக்குரிய அதிகாரங்கள் மற்றும் அந்தகார சக்திகளுக்கு எதிராகவும் போராடுகிறோம் என்று வேதம் கூறுகிறது. சீஷத்துவத்தின் இந்தப் பகுதிகளில் சாத்தான் குருட்டுத்தன்மை, கவனச்சிதறல் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தினான்; நம் சபைகளிலும் வீடுகளிலும் தேவனுடைய சத்தியம் வெற்றிபெறவும், பல சீஷர்களை எழுப்பவும் ஜெபியுங்கள்.

*தலைவர்களை பயிற்சியுங்கள்.* போதகர்கள் மற்றும் தலைவர்களே, இது உங்களிடமிருந்து தொடங்குகிறது. உங்கள் சபையில் சீஷராவதற்கு ஒரு தரிசனத்தையும், உத்தியையும் வகுக்குங்கள். தேவனுடைய உறவுமுறை முன்னுரிமை வரிசையைப் பற்றிய அறிவுறுத்துவது, உண்மையான சீஷத்துவம் என்றால் என்ன, அது யாருக்காக என்பதைப் புரிந்துகொள்வது மற்றும் மனப்பூர்வமாக மக்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் கிறிஸ்துவின் முன்மாதிரியை சீஷராக ஏற்றுக்கொள்வது ஆகியவை ஒரு நல்ல சீஷத்துவ திட்டத்தின் ஒரு பகுதியாகும். இரட்சிப்புக்குப் பிறகு முதன்மையான முன்னுரிமை, அதைத் தொடர்ந்து கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப்படை சத்தியங்களை கற்பித்தல், திருமணம் மற்றும் பெற்றோருக்குத் தெளிவான முன்னுரிமைகள் ஆகியவற்றில் கிறிஸ்துவில் நிலைத்திருப்பதைப் பற்றி அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். 1 தீமோத்தேயு 3:4-5, ஒரு போதகரின் வீடு ஒழுங்காக இல்லாதபோது, அவருடைய ஊழியம் பலவீனமாக இருக்கும் என்று கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

*ஊழியத்தை மேற்பார்வையிட ஒரு போதகர் அல்லது சாதாரண ஊழியரை நியமிக்கவும்.*
சீஷத்துவம் என்பது ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனுடைய விருப்பமாக இருக்கிறது, ஆனால், பல சந்தர்ப்பங்களில், இது ஒரு புதிய கருத்தாக இருக்கிறது. சபையின் முன்னுரிமை மையத்தை நிறுவுவதற்கான தரிசனமானது போதகரிடம் இருந்து பிரசங்கம் மற்றும் சபையின் அறிவுரை மூலம் வருகிறது; சீஷத்துவத்தின் முக்கியத்துவத்தை தெரிவிக்க வேண்டும்.

*எங்கள் பயிற்சிப்புத்தகங்களைப் பயன்படுத்த நாங்கள் மிகவும் பரிந்துரைக்கிறோம்: **கிறிஸ்தவ அஸ்திபார சத்தியங்கள்: ஒரு சீஷருக்கான உறுதியான அஸ்திபாரம், திருமணம் ஓர் ஊழியத் தொடர், மற்றும் பிள்ளை வளர்ப்பு ஓர் ஊழியத் தொடர்.*** மின்னணு பதிப்புகள் www.discipleshipworkbooks.com இல் இலவசம் அல்லது அச்சு பதிப்புகள் www.fdm.world இல் கிடைக்கும்.

FDM நிறுவனர் கிரேக் காஸ்டரிடமிருந்து செயல்படுவதற்கான அழைப்பு

> “அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.” (எபேசியர் 4:16)

உங்களுக்குப் புரிந்துவிட்டதா? “ஒவ்வொரு பகுதியும் அதன் பங்கைச் செய்கிறது," எனவே நாம் ஒவ்வொருவரும் இந்த அழைப்பை ஏற்று நம் பங்கைச் செய்ய வேண்டும். கீழ்ப்படிதல் ஆசீர்வாதத்தைத் தருகிறது என்பது ஒரு வாக்குறுதியாக இருக்கிறப்படியால், ஒவ்வொரு விசுவாசியும் ஆசீர்வதிக்கப்பட விரும்புகிறார்கள். மற்றவர்களை சீஷராக்கும், தேவனுடைய வல்லமை மற்றொரு நபரை மாற்றுவதைக் காணவும், தேவன் குணப்படுத்துவதையும் குடும்பங்களை பலப்படுத்துவதையும் பார்ப்பது ஒரு பெரிய ஆசீர்வாதம்.

வலுவான குடும்பங்கள் முக்கியமானவை. தேவன் உருவாக்கிய முதல் நிறுவனம் குடும்பம் என்பதை வேதத்தின் முதல் இரண்டு அத்தியாயங்களில் காண்கிறோம். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டும் குடும்பக் கதைகளுடன் தொடங்குகின்றன. இஸ்ரவேல் தேசம் ஒரே குடும்பத்தில் இருந்து வளர்ந்தது. உண்மையில், அன்பின் முதல் குறிப்பு ஆதியாகமம் 22:2 இல் காணப்படுகிறது, அங்கு ஆபிரகாம் தன் மகன் மீது கொண்ட அன்பைப் பற்றி அறிந்து கொள்கிறோம். உபாகமம் 6:1-9 இல், ஒரு தேசமாக இஸ்ரவேலின் உயிர்வாழ்வதற்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சீஷர்களாகவும், பயிற்றுவிக்கவும், அவருடைய அறிவுறுத்தல்களின்படி அவர்களை வளர்க்கவும் வேண்டும் என்று தேவன் தெளிவுபடுத்தினார். நம் இரட்சகர் ஒரு குடும்பத்தின் மூலம் இந்த உலகத்திற்கு வந்தார் மற்றும் ஒரு திருமணத்தில் தனது முதல் அற்புதத்தை நிகழ்த்தினார்.

திருமணத்தின் புனிதத்தன்மையானது எபேசியர் 5:25 இல் விளக்கப்பட்டுள்ளது, தேவன் தமது சபையை ஜீவன் தந்து நேசிப்பதைப் போலவே தனது மனைவியையும் நேசிக்கும்படி கணவனை அறிவுறுத்துகிறார். வசனம் 22 இல், தேவன் தம்முடைய பரிசுத்தவான்களிடமிருந்து அவர் விரும்புவதை உலகுக்கு வெளிப்படுத்தும்படியாக, தங்கள் கணவர்களை கனப்படுத்தவும், அவர்களுக்கு அடிபணியவும் மனைவிகளை அழைக்கிறார். குடும்பம் என்ற நிறுவனத்திற்கு தேவன் கொடுக்கும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டும் சில எடுத்துக்காட்டுகள் இவை. மேலும், குடும்பமானது தேவனுக்கு முன்னுரிமை என்றால், அது சபைக்கும் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக, சபைகள் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஊழியத்தில் "ஞாயிற்றுக்கிழமை பள்ளி" என்பதைத் தாண்டி, குழுக்களை உருவாக்கி செயல்பட வாலிபர் போதகர்களை பணியமர்த்துகிற அளவிற்கு முன்னேறியுள்ளன. இதன் மூலம் சபைகள் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளன என்பது தெளிவாகிறது; இருப்பினும், அந்த குழந்தைகளை உருவாக்கும் குடும்பங்கள், திருமணங்கள், பிள்ளை வளர்ப்பை கற்பித்தல் மற்றும் வளப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட பலர் சிறிதளவே செய்திருக்கிறார்கள். இளைஞர்கள் மீது நாம் கவனம் செலுத்துவதைப் போலவே கணவர்கள், மனைவிகள் மற்றும் பிள்ளை வளர்ப்பின் மீது கவனம் செலுத்த வேண்டும், இப்படி கவனம் செலுத்தும்போது குடும்பங்களிலும் சபை அமைப்பிலும் உண்மையான மாற்றத்தைக் காண்போம். தங்கள் சொந்த வாழ்வில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் பெற்றோரால் வேதத்தின் கொள்கைகளின்படி பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகள் வீட்டை விட்டு வெளியேறிய பின்னரும் கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன (அமெரிக்காவில் பிள்ளைகள் வயதுக்கு வந்தவுடன் வீட்டை விட்டு வெளியே சென்று விடுவது இயல்பான ஒன்று).

இதுவரை எழுதப்பட்ட புத்தகங்களிலேயே வேதமே சிறந்த திருமணம் மற்றும் பிள்ளை வளர்ப்பிற்குரிய கையேடு, ஆனால் அறிவுறுத்தல்கள் அதில் முழுவதும் சிதறிக்கிடக்கின்றன. படிப்பிற்கும் அறிவுறுத்தலுக்கும் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் கவனம் செலுத்தும்போது, பயிற்சி புத்தகங்களை கையில் வைத்திருப்பது மிகவும் உதவியாக இருக்கும். கொள்கைகள், கட்டளைகள் மற்றும் சில வழிகாட்டப்பட்ட கேள்விகளின் அமைப்பு, சபைக்குள் மக்களை ஒழுங்குபடுத்தும் செயல்முறைக்கு பெரும் வெற்றியைக் கொண்டுவரும். இந்தக் உபகரணங்களைக் கொண்ட கிறிஸ்தவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் அவற்றைச் செயல்படுத்தும் காலத்தைக் கொண்டவர்கள், பின்னர் சீஷர்களாக மற்றவர்களுக்குத் திருமணம் மற்றும் பிள்ளை வளர்ப்புக்குரிய பிரச்சினைகளில் வேலை செய்ய உதவலாம். குடும்பங்கள் மேம்படுத்தப்பட்டு தேவனை மகிமைப்படுத்துவதை நாம் காண்போம். பல கிறிஸ்தவ குடும்பங்களின் அழிவுகரமான திசையை நாம் உண்மையிலேயே மாற்ற விரும்பினால், சபைக்கு தெளிவான முன்னுரிமைகள் கொண்ட சீஷத்துவத்தின் புதிய பார்வை தேவை.

இந்த நிதானமான கேள்விகளை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

- சீஷராக இருப்பதன் அர்த்தம் என்ன, அல்லது ஒருவர் சீஷராக மாறுவது எப்படி என்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை?
- பல கிறிஸ்தவர்கள் இரட்சிப்புடன் பெறும் மிக முக்கியமான பாக்கியத்தை, படிப்பிலும் ஜெபத்திலும் (பக்தியுடன்) ஒவ்வொரு நாளும் இயேசுவுடன் இருக்கும் வாய்ப்பை ஏன் விரும்புவதில்லை?
- ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது அவருக்குக் கீழ்ப்படிவதற்கான வல்லமையை நாம் பெறும் இடம் என்பதை பல கிறிஸ்தவர்கள் ஏன் அறியாமல் இருக்கிறார்கள்?
- ஏன் பல கிறிஸ்தவ குடும்பங்கள் காயப்பட்டு பிரச்சனையில் உள்ளன?
- ஆரோக்கியமான குடும்பம் எது என்பதில் சபையானது தனது தரத்தை குறைத்திருக்கிறதா?
- பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் தினமும் நிலைத்திருப்பது எப்படி என்று தெரியாமல், அவர்களுடைய குடும்பங்கள் தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக, தோல்வியடையும் போது சபையானது வெற்றிகரமாக செயல்படுகிறதா?
- சீஷர், கணவன், மனைவி மற்றும் பெற்றோராக இருப்பதற்கான தேவனின் வடிவமைப்பு மற்றும் அறிவுறுத்தல்களைப் பற்றி அதன் மக்களில் பெரும் பகுதியினர் அறியாத நிலையில், சபையானது வெற்றிகரமாக செயல்படுகிறதா?
- மனமாற்றம் என்பது பரிசுத்த ஆவியின் செயல் என்பதை சபைகள் அங்கீகரிக்கிறதா, சீஷத்துவம் என்பது அவருடைய மக்களை மேம்படுத்துவதற்கான தேவனின் வடிவமைப்பு, இதில் நம்முடைய பங்கு எது?
- சபையின் முக்கிய நோக்கம் ஆவிக்குரிய வளர்ச்சியை-சீஷத்துவத்தை எளிதாக்குகிறதா?

இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பு என்பது சுவிசேஷத்தின் குறிக்கோள் என்று நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் இது "கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்" (யோவான் 15:1-8) என்று வேதம் அழைக்கும் வாழ்க்கையின் ஆரம்பம் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளலாம். இது கிறிஸ்துவின் சீஷரின் வாழ்க்கை முறை; ஆனால் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு மனித முயற்சி தேவைப்படுவது போல, கிறிஸ்தவ வளர்ச்சியின் செயல்முறைக்கும் அது தேவைப்படுகிறது. இங்குதான் சீர்திருத்தமும், இயேசுவின் பிரதான கட்டளையில் நமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு இன்றியமையாததாகிறது. சீஷர் என்பது ஒரு குறிக்கோளுடன் கூடிய செயல்முறை; இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய, நிலையான உறவில் நுழைவதற்கும், ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளருவதற்கும், தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்குக் கொடுத்துள்ள விஷயங்களை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதற்கும் ஒருவரையொருவர் ஊக்குவிக்கும் விசுவாசிகளுக்கு இடையிலான தனிப்பட்ட உறவு. இது கோட்பாடு, அறிவுறுத்தல், ஜெபம், ஊக்கம், பொறுப்புக்கூறல், கண்டனம், திருத்தம், நேரம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

நற்செய்தியைக் கூறவும், சீஷர்களை உருவாக்கவும் இயேசு நம்மைக் கேட்கிறார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையைப் பின்பற்றும்போது வல்லமையான சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். அப்போதுதான் நம் வாழ்க்கை மெய்யான, ஜீவனுள்ள தேவனை இருண்டதும் செத்துமான உலகத்திற்கு பிரதிபலித்து அவரை மகிமைப்படுத்தும். சீஷத்துவம் பற்றிய இந்த தகவல் ஒரு சபையாக உங்களை ஊக்குவிக்கும், ஒரு புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட தரிசனத்தை கொண்டு வர வேண்டும், மேலும் இயேசுவில் நிலைத்து நிற்கும் வாழ்க்கையையும் அவருடைய வார்த்தையையும் கற்பிக்கவும், ஊக்குவிக்கவும், எடுத்துக்காட்டுவதற்கும் ஆயத்தமாக இருக்கும் பல சீஷர்களை கர்த்தர் எழுப்ப வேண்டும் என்பதே எனது ஜெபம்.


இந்த தகவல் உங்களை ஆசீர்வதித்து உற்சாகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபித்துக்கொள்கின்றேன். உங்கள் தேவாலயத்தில் ஒரு சீஷத்துவ ஊழியத்தை நிருவ உதவ முடியுமா என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். எங்களின் புத்தகங்கள் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றன, மேலும் தற்போது எங்களிடம் பெரும்பாலானவை ஸ்பானிஷ், ரஷ்ய சீன மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்களது பயிற்சி புத்தகங்களில் உள்ள சத்தியங்களைக் கொண்டு தேவன் உலகெங்கிலும் உள்ள மக்களை ஆசீர்வதித்திருக்கிறார், மேலும் புதிய நாடுகளுக்கு சென்று கிறிஸ்தவ கூட்டங்களை தொடர்ந்து நடத்துவதுமல்லாமல், ஒருங்கிணைந்த சீஷத்துவ மாதிரியை சபைகளில் ஆரம்பிக்க உதவுகின்றோம்.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், கிறிஸ்துவுக்குள் உங்கள் ஊழியத்தையும் ஆசீர்வதிப்பாராக,

கிரேக் காஸ்டர்

***Translated by***
***Rev. Dr. D. Samuel.MSW.M.Th.DD.***
***Indian Rural Gospel Mission (IRGM)***
***www.irgm.org***
***Email: revdsamuel@gmail.com***
***Whatsapp: 00917904967179.***

# சீஷத்துவத்தின் ஆரம்பம்



# குடும்ப சீஷத்துவ ஊழியங்கள்

## சீஷத்துவத்தின் தரிசனம் மற்றும் வியூகம்



பாஸ்டர் கிரேக் காஸ்டர் அவர்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்களையும் பெண்களையும் சீஷர்களாக உருவாக்கியுள்ளார். குடும்ப சீஷத்துவ ஊழியத்தின் (FDM), நிறுவனராக அவர் பல சீஷத்துவ புத்தகங்களின் ஆக்கியோனாக உள்ளார் மற்றும் அமெரிக்காவிலும், ரஷ்யா உக்ரைன், கியூபா, மெக்சிகோ, ஆப்பிரிக்கா சிங்கப்பூர், ஜப்பான், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் சபைகளில் சீஷத்துவத்தை பற்றி கற்றுக்கொடுத்துள்ளார். கிரேக், FDM மற்றும் கூடுதல் சீஷத்துவ புத்தகங்களுக்கான தகவல்களுக்கு www.FDM.world என்ற வலைத்தளத்தை அணுகவும்

FDM •WORLD

ISBN 978-1-7331045-5-5